Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

யாழ்ப்பாணம்.

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 19 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 துல்ஹஜ் 10 (02.02.2004) திங்கட்கிழமை இதழ் :124

ஸ்ரீ முருகன் ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் சேவை
வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து
WESTERN UNION | MONEY TRANSFER | SM | வெஸ்டன் யூனியன் | பணப் பரிமாற்றம்
மூலம் 20 நிமிட நேரத்தில் உங்கள்
கைகளில் பணம்கிடைக்க எம்மிடம் நாடுங்கள்
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்
T.P: 021 222 5392
Fax: 2223214
E-Mail: smskr@eureka.lk
சிவன்கோவில் வீதி,
காரைநகர்.
T.P: 060 2212472
(சீ/2201)

## நவீன ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய பாதுகாப்பு அமைச்சுக்கு சந்திரிகா அனுமதி!



(கொழும்பு)

படையினருக்குத் தேவையான நவீன ஆயுதங்களை கொள்வனவு செய்யுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹேரத்திற்கு பணித்திருப்பதாக சிங்கள வார இதழான 'திவயின' செய்தி வெளியிட்டது.

அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

படையினருக்கு வேண்டிய நவீனரக ஆயுதங்களை கொள்வனவு செய்யுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க உத்தரவு பிறப்பித்துள்ளதுடன் அதனை உடன் நடைமுறைப்படுத்துமாறும் இராணுவத்தை நவீன மயப்படுத்துவதற்கான சகல ஏற்பாடுகளையும் மேற்கொள்ளுமாறும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரான ஹேரத்திற்கு பணித்தார். இதனடிப்படையில் கொள்வனவு செய்யப்படவேண்டிய புதிய கனரக ஆயுதங்களின் பெயர்பபட்டியல் ஒன்று ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த விபரங்களை உள்ளடக்கிய கேள்வி மனுக்கோரலை முன்வைக்குமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு ஜனாதிபதி உத்தரவிட்டிருக்கிறார்.

அதிநவீன ஆயுதங்கள் உட்பட தாக்குதல் விமானங்களும் இந்த கேள்வி மனுக்கோரலில் அடங்கியிருப்பதாக அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (01)

## பாதுகாப்பு அமைச்சின் செயலாளரே புலிகளுக்கு கடிதம் அனுப்பினாராம்!

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளரே கடிதம் எழுதினார். ஜனாதிபதி கடிதம் எதுவும் அனுப்பவில்லை என ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்திலிருந்து அவர் நேற்று விடுத்த செய்திக்குறிப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார். அதில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஜனாதிபதி இரகசியமான முறையில் கடிதத் தொடர்பை ஏற்படுத்தியிருப்பதாக வெளிவந்திருக்கும் தகவல்கள் பொய்யானவை.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹேரத்தாலேயே தற்போதைய யுத்தநிறுத்த உடன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை இனப்பிரச்சினை தீர்வு முயற்சியில் இந்தியா தலையிடும் தருணம் வந்துவிட்டதாம்!

## அமைதியாக நடைபெற்ற கூட்டணியின் செயற்குழுக் கூட்டம்!

(கொழும்பு)

பலத்த பாதுகாப்பின் மத்தியில் கொழும்பில் நேற்று நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய செயற்குழுக் கூட்டம் அமைதியாக நடைபெற்றது.

கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து ஆனந்தசங்கரியை வெளியேற்ற மத்தியகுழுவினர் தீர்மானித்திருந்த நிலையில் நேற்றைய மத்திய செயற்குழுக் கூட்டம் பரவலான எதிர்பார்ப்பினை ஏற்படுத்தியிருந்தது.

எனினும், நேற்றுக்காலை 10 மணியளவில் கட்சித் தலைவர் ஆனந்தசங்கரி தலைமையில் செயற்குழு கூடியபோது - முரண்பாடான விடயங்கள் குறித்து இந்தக் கூட்டத்தில் பேசுவதில்லை என்ற இணக்கப்பாடு உருவானதுடன், அவசரமாக முடிவெடுக்க வேண்டிய

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புதுடெல்கியில் லக்ஷ்மன் கதிர்காமர் கருத்து



(புதுடெல்கி)

**இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வில் இந்தியா தலையிடும் நேரம் வந்துவிட்டது. இந்தியா இனியும் கண்களை மூடிக்கொண்டு இருக்க முடியாது.**

**இந்தியா நேரடியாக இல்லாமல் மறைமுகமாக இனப்பிரச்சினை விவகாரத்தில் தற்போது ஈடுபட்டுள்ளது. இதற்கான சமிக்ஞையை எமக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இந்தியா தந்துள்ளது என ஜனாதிபதி சந்திரிகாவின் ஆலோசகரும், நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார்.**

இந்தியாவில் நடக்கும் ஆசிய பாதுகாப்பு மாநாட்டில் கலந்துகொள்வதற்காக புதுடெல்கி சென்ற வேளையில் அங்குவைத்து பத்திரிகையொன்றுக்கு அளித்த பேட்டியியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கை அரசாங்கத்துக்கும் - விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெற்றுவந்து, தற்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ தேசிய விளையாட்டு விழா கிளிநொச்சியில் 20 ஆம் திகதி ஆரம்பம்

(கிளிநொச்சி)

மூன்றாவது தமிழீழ தேசிய பெரு விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 20 ஆம் திகதி கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

தமிழர் தாயகத்தின் எட்டு மாவட்டங்களை உள்ளடக்கிய போட்டிகள் இவ்வாண்டும் நடைபெறவுள்ளன.

இதில் கேணல் சங்கர் ஞாபகார்த்த வெற்றிக்கேடயத்துக்கான துடுப்பாட்டப் போட்டி லெப்.கேணல் விக்ரர் ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்துக்கான உதைபந்தாட்டப் போட்டி, மேஜா அல்பேட் ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்துக்கான ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி, லெப்.சதா ஞாபகார்த்த பெண்களுக்கான கால்பந்தாட்டப் போட்டி, மேஜர் சோதியா

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு ஹெலி வசதி வழங்குவதற்கா பாதுகாப்பு அமைச்சை பொறுப்பேற்றீர்கள்?

### ஜனாதிபதியிடம் சிஹலஉறுமய கேள்வி எழுப்புகிறது

(கொழும்பு)

புலிகளின் போக்குவரத்துக்காக ஹெலிகொப்ரரை வழங்குவதற்காகவா ஜனாதிபதி சந்திரிகா - ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திடம் இருந்து பாதுகாப்பு அமைச்சினை பொறுப்பேற்றுக்கொண்டார் என சிஹல உறுமய கேள்வி எழுப்பியுள்ளது.

இது தொடர்பாக சிஹல உறுமய மேலும் தெரிவித்திருப்பதாவது,

பாதுகாப்பு அமைச்சினைப் பொறுப்பேற்றுக் கொண்டதன் மூலமாக புலிகளின் ஊடுருவலைத் தடுக்கவேண்டிய பொறுப்பைக் கொண்டிருந்த ஜனாதிபதி சந்திரிகா, கிளிநொச்சியிலிருந்து புலிகளின் அரசியற்துறை பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் குழுவினர் கட்டுநாயக்கா விமானநிலையத்துக்கு வருவதற்கு ஹெலிகொப்ரர் உதவிகளை செய்து கொடுத்திருக்கிறார்.

புலிகளுக்கு ஹெலி உதவி வழங்கியதன் மூலம் பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதியிடம் இருந்தாலும், ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கத்திடம் இருந்தாலும் ஒன்றே எனக் கருதவேண்டியுள்ளது.

பாதுகாப்பு அமைச்சு ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திடம் இருந்தபோது

(12 ஆம் பக்கம் பார்க்க)

## படையினரை வெளியேறக் கோரி செயலகம் முன் இன்று மறியல்!

(வண்ணை)

ஆக்கிரமித்துள்ள பகுதிகளில் இருந்து படையினரை உடனடியாக விலகக்கோரி கொழும்புத்துறை மக்கள் எதிர்வரும் சுதந்திர தினத்தன்று யாழ். செயலகம் முன்பாக மறியற்போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளனர்.

தமது கிராமங்களான நெடுங்குளம், கொழும்புத்துறை, எழிலூர், பாஷையூர் பகுதி மக்களே கரையோரப் பகுதிகளில் தமது வீடுகளில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி சந்திரிகாவுடன் இணைந்து அரசாங்கம் அமைக்க ஐ.தே.க. தயார்!

### மலிக் சமரவிக்கிரம தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகாவுடன் இணைந்து அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு ஐக்கிய தேசிய முன்னணிஅரசாங்கம் தயாராக உள்ளது என ஐக்கிய தேசியக்கட்சியின் தவிசாளரும், மனோ - மலிக் கூட்டணியில் ஒருவருமான மலிக் சமரவிக்கிரம தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஐக்கிய தேசியக் கட்சியும், சுதந்திரக் கட்சியும் இணைந்து பல பிரச்சினைகளை தீர்ப்பதற்கான வழிகளை அடைந்துள்ளன. இதற்குள் சமாதான செயலணிக்குழுவும் அடங்கும். இந்த சமாதானக் குழுவின் தலைவராக ஜனாதிபதியே இருப்பார்.

எவ்வாறாயினும் தற்போதைய அரசியல் நெருக்கடியைத் தீர்த்து இறுதி உடன்பாடு காண்பதற்கு பல சுற்றுப் பேச்சுவார்த்தையை நடத்தவேண்டியுள்ளது.

ஜனாதிபதியின் கட்சி இவ்வாறான தொடர் பேச்சுவார்த்தைக்கு ஆதரவுதரும் என ஐக்கிய தேசிய முன்னணி எதிர்பார்க்கிறது.

அத்துடன் கடந்த வெள்ளிக்கிழமை நடக்கவிருந்த மனோ - மலிக் சந்திப்புக்களை ஜனாதிபதி செயலகமே செவ்வாய்க்கிழமைக்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)


இன்று ஹஜ்ஜுப் பெருநாளை கொண்டாடும் இஸ்லாமிய வாசகர்கள் அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள்.

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை.....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
071-2348888, 071-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
email :- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
your friend in the skies...

## பாரதிதாசன் நூலகத்திற்கு கணினி அன்பளிப்பு!

(வடமராட்சி)

அல்வாய் பாரதிதாசன் படிப்பக நூலகத்திற்கு 1,65,000 ரூபா பெறுமதி யான தமிழ், ஆங்கில மொழிகளி லுள்ள ஒரு தொகுதி புத்தகங்களும், கணினி ஒன்றும் அந்தவூரைச் சேர்ந் தவரும் கொழும்பில் வசிப்பவரு மான சட்டத்தரணி தங்கராசா அன்ப ளிப்புச் செய்துள்ளார். (17)


## பணிநிலை வெற்றிடம்

### ஆயப்பகுதி

ஆயப் பகுதியில் கீழ்க்காணும் பணிநிலைகளுக்கான வேண்டுகைகள் கோரப்படுகின்றன

**01. அலுவலர்** [ஆண்கள்]

தகைமைகள்:
க.பொ.த (உயர்தர) இல் பொருத்தமான பிரிவில் 3 பாடங்களுக்குக் குறையாமல் தேர்ச்சியடைந்திருத்தல் வேண்டும்.

**02. ஆய உதவியாளர்** [ஆண்கள்]

தகைமைகள்:
க.பொ.த (சாதாரண) இல் தமிழ், கணிதம் உட்பட ஆறுபாடங்களில் தேர்ச்சியடைந்திருத்தல் வேண்டும்.

**03. அலுவலக உதவியாளர்** [ஆண்கள்]

தகைமைகள்:
ஆண்டு 10 தேர்ச்சியடைந்திருத்தல் வேண்டும்.

**04. பாதுகாவலர்**

தகைமைகள்:
ஆண்டு 9 தேர்ச்சியடைந்திருத்தல் வேண்டும்.
உடல் வலுவும் தேக ஆரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

- தங்குமிட வசதி செய்து தரப்படும்.
- மேலதிக நேரக்கொடுப்பனவு வழங்கப்படும்
- ஊழியர் நயநிதி வசதி உண்டு

நேர்முகத்தேர்வு

இடம்:
ஆயப்பகுதி,
நடுவப்பணியகம்,
கிளிநொச்சி

காலம்:
2004.02. 10ஆம், 11 ஆம் நாள்
காலை 11 மணி

பொருத்தமான வேண்டுகையாளர்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட தன்வரலாறு (சுயவிபரம்), சான்றிதழ்களுடன் சமூகம் தரவும்.

ஆயம், நிதித்துறை,
தமிழீழ விடுதலைப் புலிகள்

02.02.2004


# சர்வதேச கல்வியக ஆலோசகருடன் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

மலேசிய நாட்டின் தேசிய ஆசிரி யர் பணியாளர் சங்க முன்னாள் பொதுச்செயலாளரும், சர்வதேச கல்வியகத்தின் தற்போதைய நிபு ணத்துவ ஆலோசகருமான எ.ராஜ குரு யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

இவருடன் குடாநாட்டு கல்விப் பிரச்சினைகள் தொடர்பாக, கலந் துரையாடல் ஒன்று இன்று மாலை 4 மணிக்கு நல்லூரில் அமைந்துள்ள இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் தலைமைப் பணிமனையில் நடை பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் தமி ழர் ஆசிரியர் சங்கத்தின் சகல கிளைத் தலைவர்கள், பொருளாளர் கள், மற்றும் தாய்ச்சங்க மாவட்ட, வலயமட்ட நிர்வாக உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு -

யாழ்.மாவட்ட தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் க.குமார சாமி கேட்டுள்ளார்.

# கோப்பாய் கோட்ட மட்டத்தில் வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலய கோப்பாய்க்கல்விக் கோட்ட பாடசாலை அணிகளுக் கிடையிலான வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் யாழ்.கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் இன்று ஆரம்பமாகவுள்ளது.

இன்று காலை 8.30 மணிக்கு ஆரம்பமாவுள்ள இந்தப் போட்டியில், 15,வயதுப்பிரிவில் அத்தியார் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி அணியும், கோப்பாய் மகாவித்தி யாலய அணியை எதிர்த்து ஆவரங்கால் மகாவித்தியாலய அணியும், சிறுப்பிட்டி அ.கா. பாடசாலை அணியை எதிர்த்து உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியா லய அணியும் 17 வயதுப்பிரிவில் அத்தியார் இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து அச்செழு சைவப்பிரகாச வித்தியாலய அணியும், உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய அணியை எதிர்த்து கோப்பாய் கிறிஸ்தவ கல் லூரி அணியும், ஆவரங்கால் நட ராசா ராமலிங்க வித்தியாலய அணியை எதிர்த்து கோப்பாய் மகா வித்தியாலய அணியும், ஆவரங்கால் மகாஜனா கல்லூரி அணியை எதிர்த்து உரும்பிராய் இந்துக் கல் லூரி அணியும், 19 வயதுப் பிரிவில் நடராசா ராமலிங்க வித்தியாலய அணியை எதிர்த்து அத்தியார் இந் துக் கல்லூரி அணியும் மோதவுள் ளன. (58)

# கோப்பாய் கோட்ட மட்டத்தில் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

(ஈச்சமோட்டை)

யாழ்.வலய கோப்பாய்க் கல்விக் கோட்ட பாடசாலை அணிகளுக்கி டையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் இன்று முதல் ஆவரங்கால நடராசா ராமலிங்கம் வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இன்று பி.ப. 1.30 மணிமுதல் நடைபெறவுள்ள போட்டிகளின் விப ரம் பின்வருமாறு:-

15 வயதுப் பிரிவில் ஆவரங்கால் நடராசா ராமலிங்கம் வித்தியாலய அணியை எதிர்த்து அச்சுவேலி சைவப்பிரகாச வித்தியாலய அணி யும், சோமஸ்கந்தா கல்லூரி அணியை எதிர்த்து கோப்பாய் கிறிஸ்தவ கல் லூரி அணியும், இடைக்காடு மகா வித்தியாலய அணியை எதிர்த்து ஆவரங்கால் மகாஜனா வித்தியா லய அணியும், 17 வயதுப்பிரிவில் அச்சுவேலி மத்திய கல்லூரி அண யை எதிர்த்து சோமஸ்கந்தா கல் லூரி அணியும், 19 வயதுப் பிரிவில் சோமஸ்கந்தா கல்லூரி அணியை எதிர்த்து இடைக்காடு மகாவித்தி யாலய அணியும் மோதவுள்ளன.(58)

## மாவிட்டபுரத்தில் தைப்பூச விழா

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆல யத்தில் தைப்பூசவிழா எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. கோவிலுக்கு செல்லும் அடியார்கள் அன்றுகாலை 8.00 மணிக்கு தெல்லிப்பளை சோதனைச் சாவடியில நிற்குமாறும் அதற்கான போக்குவ ரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ள தாகம் அறிவிக்கப்பட்டுள்ளது. (72)

# வல்வை வைத்தீஸ்வர ஆலய மகாகும்பாபிஷேக பெருவிழா

வல்வை ஸ்ரீ வாலாம்பிகை தேவி ஸ்ரீ.வைத்திஸ்வரசுவாமி தேவஸ்த் தான மஹா கும்பாபிஷேக பெருவிழா நாளை மறுதினம் காலை 7.18 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து கிரிகைகளும் விஷேட பூசைகளும் இடம்பெறும்.

இதற்கான பூர்வாங்க கிரிகைகள் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

இன்று காலை 7.00 மணிமுதல் எண்ணைக்காப்பு சார்த்தும் நிகழ்வு ஆரம்பமாகி நாளை நண்பகல் வரை நடைபெறும்.

நாளை மறுதினம் அதிகாலை 4.00மணிக்கு விநாயகர் வழிபாட் டுடன் கும்பாபிஷேக நிகழ்வு அரம் பமாகி மாலை 5.00 மணிவரை தொடர்ந்து திருக்கல்யாண உற்சவ மும் நடைபெறும்.

தேவஸ்த்தான பிரதமகுரு சிவ ஸ்ரீ.மனோகர சிவாச்சாரியார் தலை மையில் நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

கும்பாபிஷேக நிகழ்வின் ஆசியு ரையை நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரி அவர்களும், யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் பிம்மஸ்ரீ கோபாலகிருஷ்ண ஐயர் ஆகியோர் நிகழ்த்துவர்.

## பரிசளிப்பு விழா

லண்டன் தமிழ்ப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்திற்கான கொடிக் கீதம் இயற்றும் போட்டியில் பங்குப நியவர்களுக்கான பரிசு வழங்கும் நிகழ்வும், யாழ்ப்பாணப் பாடசாலை கள் விளையாட்டுச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட உதைபந்தாட்டப் பயிற்சி முகாமில் பங்குபற்றியவர்க ளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ் வும் நாளை செவ்வாய்க்கிழமை பிற் பகல் 3 மணிக்கு கொக்குவில் இந் துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற வுள்ளது.

இந்த நிகழ்விற்குப் பிரதம விருந் தினராக லண்டன் தமிழ்ப் பாடசாலை கள் விளையாட்டுச் சங்கச்செயலா ளர் என்.ஸ்ரீகெங்காதரன் கலந்து கொண்டு சான்றிதழ்களையும் பரி சில்களையும் வழங்கவுள்ளார்.

பரிசு வழங்கும் நிகழ்வினைத் தொடர்ந்து யாழ்ப்பாணப் பாடசாலை களின் விளையாட்டு அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல், ஒன்றும் இடம்பெறவிருப்பதால் அனைவரை யும் பங்குகொள்ளும்படி அறிவிக்கப் பட்டுள்ளது


O/L... இன் அடுத்து?

**ENGLISH COURSE**

கிளாஸ்போகாமலே ENGLISH கற்க முடியும்

நீங்கள் இருக்கும் இடத்தில் இருங்கள் நாம் அங்கு உங்களுக்கு ஆங்கிலம் கற்பிக்கின்றோம்.

அழகிய கைக்கடிகாரம் மற்றும் அழகிய கிளியர் பேக் பைல் ஒன்றும் இலவசமாக வழங்கப்படும்

பாடநெறிக் கட்டணம் இல்லை. பதிவுக் கட்டணமும் உடன் செலுத்த வேண்டாம்.

விபரங்களுக்கு சுயவிலாசத்துடன் 2.00 பெறுமதியான 5 முத்திரைகள் அனுப்பிப் பெறலாம்.

UNION EDUCATIONAL INSTITUTE
P.O.BOX 143, KANDY, SRI LANKA. (601)






நிறஞ்சனாஸ் சங்கானை

பிரசாந், கிரண் நடித்த

வின்னர்

காட்சி நேரம்:11.00, 2.45, 6.00, (பு.நே.) (சி-2196)

How To Lose A Guy In 10 Days

ராஜா யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
பிரசாந், தியாகராஜன், பானுப்பிரியா நடித்த

ஜெய்

காட்சிநேரம் :
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம். (சி-2197)

# இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம்

# உடனடியாகக் கைச்சாத்திடுவது சாத்தியமில்லை!

## இராஜதந்திர வட்டாரங்கள் கருத்து

(கொழும்பு)

இலங்கை - இந்திய பாதுகாப்பு உடன்படிக்கை தற்காலிகமாகப் பின்போடப்பட்டுள்ளது. இந்தியாவில் நாடாளுமன்றம் எதிர்வரும் 6 ஆம் திகதி கலைக்கப்பட உள்ளதாலும் நாடு விரைவில் பொதுத்தேர்தல் ஒன்றை எதிர்நோக்கி இருப்பதாலுமே இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் உடனடியாகச் சாதத்தியமாகவில்லை என கொழும்பிலுள்ள இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கையில் நிலவுகின்ற இன்றைய அரசியல் நெருக்கடிக்குள் இலங்கை இந்திய ஒப்பந்தமானது ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கு அரசியல் இலாபத்திற்கென தாங்களே இதனை செய்ததாக காட்டமுயல்வதும் அதனால் ஏற்படுகின்ற விரும்பத்தகாத அரசியல் விளைவுகளையும் கருத்திற்கொண்டே தற்பொழுது உடனடியாக ஒப்பந்தத்தை கைச்சாத்திட புதுடில்லி வட்டாரங்கள் விரும்பவில்லை என்று தெரியவருகிறது.

ஆரம்பத்தில் இந்த ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆரம்பித்து அதனை தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான சர்வதேச பாதுகாப்பு வலைப்பின்னலில் முக்கியமான அம்சமாக ஐ.தே.க. பிரசாரம் மேற்கொண்டது. ஆனால், கடந்த நவம்பர் மாதம் பாதுகாப்பமைச்சை பொறுப்பேற்ற கையோடு, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவினால் புதிதாக நியமிக்கப்பட்ட பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறிசேன ஹேரத் தலைமையிலான குழுவொன்றை அனுப்பி இந்த ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதற்கான பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு ஏற்பாடுசெய்தார்.

ஜனாதிபதியினால் பொறுப்பேற்கப்பட்ட ஊடகங்கள் இந்தியா - இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம் ஜனாதிபதியினாலேயே கண்காணிக்கப்படுவதாக பிரசாரங்களை மேற்கொண்டன. இதனிடையில் ஜே.வி.பி.யும் ஏனைய சிங்களக் கட்சிகளும் விடுதலைப்புலிகளை கட்டுப்படுத்துவதற்கு இந்தியாவின் உதவி முக்கியம் எனவும் அந்த வகையில் இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் முன்னெடுக்கப்படவேண்டியது அவசியம் என்ற கருத்துக்களை வெளியிட்டன.

இலங்கைக்கு புறப்படுவதற்கு முன்னர் இணைய சஞ்சிகையொன்றுக்கு அளித்த விரிவான பேட்டி ஒன்றில் இலங்கை - இந்திய ஒப்பந்தம் இலங்கையின் வெளியுறவுக் கொள்கைக்கு அடித்தளமாக அமையவேண்டும் என ஜே.வி.பி.யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்திருந்தார். இந்த நிலையில் இந்திய - இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம், ஐ.தே. கட்சியினாலேயே ஆரம்பிக்கப்பட்டது எனவும் அது தொடர்பாக இந்திய அரசுடன் பேச்சுவார்த்தைகளை ஐக்கிய தேசிய கட்சியே தொடர்ந்து மேற்கொள்ளும் என அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்திருந்தன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் ஆரம்பிக்கப்பட்ட இந்த விடயத்தை தானே செய்துமுடிக்கப்போவதாக ஜனாதிபதி புகழ் தேடுவதை ஐக்கிய தேசிய கட்சி விரும்பவில்லை. இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தத்தை செய்யும் அரசியல் தலைவருக்கு சிங்கள மக்களிடம் ஆதரவு கிடைக்கும் என்ற அடிப்படையிலேயே இலங்கையின் இரு தலைவர்களும் ஏட்டிக்குப்போட்டியாக செயற்படுகின்றார்கள் என்பதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது என்று இந்திய ஆய்வாளர் ஒருவர் தெரிவித்தார்.


அண்மையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சர் மிலிந்த மொரகொடவை இந்தியத் தலைநகருக்கு பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பாக பேசுவதற்கு அனுப்பியிருந்தார்.

ஒப்பந்த விவகாரம் இரு கட்சிகளுக்கிடையில் அரசியல் இலாபம் தேடப்படுவதற்கான ஒரு விடயமாக பந்தாடப்படுவதை யாரும் விரும்பவில்லை என ஒரு இந்திய அரசியல் அவதானி ஒருவர் தெரிவித்திருந்தார்.

இந்தச் சூழ்நிலையில் உடனடியாக பாதுகாப்பு ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவது கொழும்பில் நிலவும் அரசியல் முரண்பாட்டை மேலும் கூர்மையாக்கவே உதவும் எனவும், ஆகவே இந்திய அரசு ஒப்பந்த விடயத்தை பின்போட வேண்டுமென்றும் ஐ.தே.க. தலைமைப் பீடம் இந்தியாவுக்கு எடுத்துரைத்துள்ளதாக அக்கட்சியைச்சேர்ந்த ஒருவர் தெரிவித்தார்.

இதனிடையில் ஜனாதிபதி தரப்பிலிருந்தும் பிரதமர் தரப்பிலிருந்தும் பாதுகாப்பு ஒப்பந்தம் பற்றி பேச தூதுக்குழுக்கள் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டபோதும் ஒப்பந்த வரைவினுடைய அம்சங்கள் எதுவும் இதுவரை தயாரிக்கப்படவில்லையென்றும் தெரியவருகிறது.



'வேல்ட் விஷன்' உதவியுடன் மட்டு - தம்பலாவத்தையில் மாதிரிப் பண்ணை திறந்துவைக்கப்படுவதை முதற்படத்திலும், மண்டூர் குருமண்வெளியில் படகுச் சேவைக்காகப் புதிதாக வெள்ளோட்டம் விடப்படும் படகை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# திருமலையில் இரு தமிழ்க்கிராமங்களை சேருவிலவின் கீழ் கொண்டுவர முயற்சி!

## இரா. சம்பந்தன் கூறுகிறார்

(திருமலை)

திருக்கோணமலையில் இரண்டு தமிழ்க்கிராமங்களை சேருவில சிங்கள உதவி அரச அதிபர் பிரிவுக்குள் கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகள் அரச தரப்பால் மேற்கொள்ளப்படுகின்றன.

மூதூர் அரச அதிபர் பிரிவிலுள்ள உப்பூறல், சீனன்வெளி ஆகிய கிராமங்களையும், சேருவில சிங்கள உதவி அரச அதிபர் பிரிவின் கீழ் கொண்டு செல்ல அரச நிர்வாகம் முயற்சி மேற்கொள்கின்றது. இப்படி மாற்றுவதற்கு அனுமதிக்க முடியாது என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்

மூதூர் பிரதேசம் மூன்று உதவி அரச அதிபர் பிரிவுகளாக பிரிக்கப்பட்டு சேருவில சிங்கள உதவி அரச அதிபர் பிரிவு திட்டமிட்டு உருவாக்கப்பட்டது. இரண்டு தமிழ்க்கிராமங்களையும் சேருவிலவின் கீழ் கொண்டு செல்ல திருக்கோணமலை அரச அதிபர் சிபார்சு செய்துள்ளார். உப்பூறல் கிராமம் 127 குடும்பங்களையும், சீனன்வெளி 60 குடும்பங்களையும் கொண்டுள்ளன.

திருகோணமலை அரச அதிபராக உள்ள சிங்கள இனத்தவர் திட்டமிட்டு இரண்டு தமிழ்க்கிராமங்களையும் சேருவிலவின் கீழ் கொண்டு செல்ல முனைகின்றார். முன்னைய சிங்களக் குடியேற்றங்களும் இவ்வாறாகவே இடம்பெற்றன.

# மனோ - மலிக் மீண்டும் இன்று சந்திக்கவுள்ளனர்

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சு, சமாதான செயற்பாடுகள் என்பன தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சைகளை முடிவுக்குக்கொண்டு வரும் பொருட்டு ஜனாதிபதி - பிரதமர் ஆகியோரின் பிரதிநிதிகளைக் கொண்ட குழு தொடர்ந்தும் பேச்சுவார்த்தை நடத்த தீர்மானித்துள்ளது.

இதன்படி இந்தக்குழு இன்று கூடவுள்ளதாக பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார். இதற்கு முன்னர் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின்போது சில விடயங்களில் இணக்கப்பாடு காணப்பட்டதாகவும், தொடரும் பேச்சுவார்த்தைகளில் இதுவரை தீர்வு காணப்படாத விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படும் எனவும் கூறப்படுகின்றது.

ஜனாதிபதியின் சார்பில் அவரது சிரேஷ்ட ஆலோசகர் மனோ தித்தவெல ஐக்கிய தேசியக்கட்சியின் தவிசாளர் மலிக் சமரவிக்கிரம ஆகியோருக்கு இடையில் இந்த பேச்சுவார்த்தைகள் நடத்தப்படவுள்ளன.

மூன்று அமைச்சுப் பொறுப்புக்களை ஜனாதிபதி, கடந்த நவம்பர் மாதம் பொறுப்பேற்றதன் பின்னர் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையில் பொது இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்தும் பொருட்டு பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அரசியற் பலத்தை வெளிக்காட்டவே உள்ளூராட்சித் தேர்தலில் போட்டி!

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் கூறுகிறார்



(கொழும்பு)

சர்வதேச சமூகத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் எமது அரசியற பலத்தைப் பற்றிய செய்தியை தெரிவிப்பதற்காகவே எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடுவதாக முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கல்முனை மாநகரசபைக்குப் போட்டியிடும் முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்கள் மத்தியில் பேசும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்தத் தேர்தலில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிடுவது தமிழ் மக்களையோ, மாற்றுக்கட்சிகளின் அரசியல்வாதிகளையோ எதிர்ப்பதற்கல்ல.

இந்தச் சந்திப்பில் கட்சியின் தவிசாளர் பஷீர் சேகுதாவுத், நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹாரித் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# மகேஸ்வரன், சந்திரசேகரன் மீது ஒழுங்கு நடவழிக்கை எடுக்கவும்!

## பிரதமரிடம் - திலக் கருணாரட்ன கோரிக்கை

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் மதிப்பை உயர்த்துவதன் மூலம் - இலங்கையின் மதிப்பை அழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் அமைச்சர்கள் மீது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சிஹல உறுமய கேட்டுள்ளது.

இது தொடர்பாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு - சிஹல உறுமயவின் தலைவர் திலக் கருணாரட்ண எழுதியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

அமைச்சர் மகேஸ்வரன் கடந்த 27 ஆம் திகதி கொழும்பில் பிரிட்டிஷ் தூதுவரைச் சந்தித்து விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்டிருக்கும் தடையை விலக்கிக்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்தார்.

அமைச்சர் மகேஸ்வரன் ஒரு அமைச்சர் மட்டுமல்ல. ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரும் கூட. ஐக்கிய தேசியக் கட்சிக்கு நீங்களே தலைமை தாங்குகிறீர்கள். ஆகையால் அமைச்சர் மகேஸ்வரனின் இந்த யோசனையை உங்கள் அரசாங்கத்தின் கருத்து என்று நாம் கருதலாமா?

அப்படியில்லாவிட்டால் ஐக்கிய தேசியக் கட்சி - பிரிட்டனில் புலிகளின் மீது விதிக்கப்பட்டிருக்கும் தடை தொடர்பாக என்ன கருத்தைக் கொண்டிருக்கிற என்பதைத் தெளிவுபடுத்தவேண்டும்.



மேலும் இநதக் கடிதத்தில் அமைசசர் சந்திரசேகரன் வெளியிட்ட அறிக்கை குறித்தும் திலக் கருணாரட்ன பிரஸ்தாபித்திருக்கிறார்.

மட்டக்களப்பில் நடந்த பொங்கு தமிழ் நிகழ்வில் அமைச்சர் சந்திரசேகரன் பேசும்போது, புலிகளின் கோரிக்கைகளை அரசாங்கம் நிறைவேற்றத் தவறினால் தமிழ்மக்கள் போருக்குச் செலலத் தயாராகவே உள்ளனர் என்று அவர் குறிப்பிட்டிருக்கின்றார்

அரசாங்கம் மீண்டும் போருக்குச் செல்லத் தயாராக இருக்கிறதா என்பதை எமக்கு தெளிவுபடுத்தவேண்டும். அத்துடன் அரசாங்க அமைச்சர் ஒருவர் புலிகளின் சார்பாக பேசிவருகிறார்.

ஆகையால்தான் அரசாங்கம் புலிகள் சார்பாக நடந்துகொள்வதாக முன்னர் பலதடவைகள் கூறியிருப்பதாகவும் குறிப்பிட்ட திலக் கருணாரட்ண இந்த அமைச்சர்கள் மீது கட்சியின் சட்டதிட்டங்களின் அடிப்படையில் பிரதமர் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கேட்டுள்ளார்.

# 5 விக்கெட்டுகளால் இந்தியாவை தோற்கடித்தது அவுஸ்ரேலியா!

அவுஸ்ரேலியாவில் நடைபெறும் வி.பி. கிண்ண முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் நேற்றைய 11 ஆவது லீக் ஆட்டத்தில் இந்திய அணி 5 விக்கெட்டுக்களால் அவுஸ்ரேலியாவிடம் தோல்வியடைந்தது.

பேர்த் நகரில் அவுஸ்ரேலியாவுக்கு எதிரான போட்டியில் நாணயச் சுழற்சியல் வெற்றி பெற்ற இந்திய அணித்தலைவர் கங்கூலி தமது அணியை துடுப்பெடுத்தாடப் பணித்தார்.

நேற்றைய ஆட்டத்தில் சச்சின், ஷேவாக் இருவரும் விளையாடியபோதிலும் அவுஸ்ரேலிய வீரர்களின் பந்துவீச்சுக்கு முகம்கொடுக்க முடியாத நிலையில் இந்திய அணியின் துடுப்பாட்டவீரர்கள் திணறினர். முடிவில் இந்திய அணி 49 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 203 ஓட்டங்களை எடுதது சுருண்டது.


இந்திய அணி சார்பில் யுவராஜ் சிங் 47 ஓட்டங்களையும், முரளி கார்த்திக், ஷேவாக் இருவரும் தலா 32 ஓட்டங்களையும் கூடுதலாகப் பெற்றனர். நம்பிக்கை நட்சத்திரங்களான சச்சின் 5, லக்ஸ்மன் 1, கங்கூலி 1, ராவிட் 13 ஓட்டங்களை மட்டுமே பெற்றனர்.

பிரட்லீ மிகச் சிறப்பாகப் பந்துவீசி 3 விக்கெட்டுக்களையும் சைமன் 2 விக்கெட்டுக்களையும் கிலெஸ்பி, வில்லியம்ஸ், பிக்கல் மூவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலியா 32 ஓவர்களில் தனது வெற்றி இலக்கை 5 விக்கெட்டுக்களை இழந்து பெற்றுக்கொண்டது. அவுஸ்ரேலிய அணியின் முதல் 3 விக்கெட்டுக்கள் விழுந்தபோதிலும், 3 ஆவது விக்கெட்டுக்காக கில்கிறிஸ்ட்டுடன் ஜோடி சேர்ந்த சைமன், ஜோடி மிகச் சிறப்பாக துடுப்பெடுத்தாடியது. இவர்கள் இருவரும் 3 ஆவது விக்கெட் இணைப்பாட்டமாக 123 ஓட்டங்களைப் பகிர்ந்துகொண்டனர். கில்கிறிஸ்ட் 75 ஓட்டங்களுடனும், சைமன் 73 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் அகர்கார், பதான் இருவரும் தலா 2 விக்கெட்டுக்களையும் பாலாஜி 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

நடந்து முடிந்த போட்டிகளின்படி அவுஸ்ரேலியா 37 புள்ளிகளுடன் முதலாவது இடத்திலும் இந்தியா 23 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும் சிம்பாப்வே 6 புள்ளிகளுடன் 3 ஆவது இடத்திலும் உள்ளன.

இந்தத் தொடரின் இறுதி லீக் ஆட்டம் நாளை இதே மைதானத்தில் இந்தியா - சிம்பாப்வே அணிகளுக்கிடையில் பகல் இரவாக நடைபெறவுள்ளது.





மெல்பேர்னில் நடந்த ஆவுஸ்ரேலிய ஓபன்டெனிஸ் பெண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டியில், பெல்ஜியத்தின் ஜஸ்டின் ஹெனின் 6-3, 4-6, 6-3 என்ற செட் கணக்கில் சக வீராங்கனை கிம் கிளைஸ்டர்சை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றார். வெற்றிக்கோப்பையுடன் ஹெனின் (இடது). அருகில் கிளைஸ்டர்ஸ்.

# இந்திய அணி வீரர்களுக்கு அக்ரம் பயிற்சியளிக்கலாம்

## பாகிஸ்தான் நீதிமன்றம் தீர்ப்பு



(லாகூர்)

பாகிஸ்தான் அணியின் முன்னாள் அணித்தலைவர் வஸிம் அக்ரம் சிறந்த பந்துவீச்சாளரான இவர் ஓய்வுக்குப்பின் தொலைக்காட்சி வர்ணனை செய்து வருகிறார்.

அவுஸ்ரேலியாவில் நடைபெற்றுவரும் 3 நாடுகள் பங்கேற்கும் போட்டியின்போது, இந்திய இளம் வீரரான இர்பான் பதானுக்கு பந்துவீசும் நுணுக்கம் பற்றி சொல்லிக் கொடுத்தார். இதற்கு பாகிஸ்தானின் முன்னாள் வீரர்களான ஜாவிட் மியான்டட், ரமீஷ்ராஜா ஆகியோர் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதற்கிடையே, கடந்த ஆண்டு வஸிம் அக்ரம் இந்திய பந்துவீச்சாளர்களுக்கு பயிற்சி அளிக்க இருப்பதாக கூறப்பட்டது. இதைத் தொடர்ந்து செப்ரெம்பர் மாதம் வஸிமுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது.

பத்திரிகையில் வந்த செய்தியின் அடிப்படையில் நஜ்முல் அப்பாஸ் என்பவர் லாகூர் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தார். அந்த மனுவில் வஸிம் அக்ரம் திறமையானவர். இந்திய வீரர்களுக்கு அவர் பயிற்சி அளிப்பதை நிறுத்த வேண்டும் என்று கூறியிருந்தார்.

இந்த மனுவை நேற்றுமுன்தினம் நீதிபதி அன்வர் தள்ளுபடி செய்தார். வஸிம் அக்ரம் சர்வதேச அளவில் பேசப்படும் சிறந்த வீரர். இது மாதிரி வழக்குத் தொடர்வது தேவையற்றது. அவர் இந்திய வீரர்களுக்கு பயிற்சி அளிக்கலாம் என்று நீதிபதி தீர்ப்பளித்தார்.

அத்தோடு வழக்குத் தொடர்ந்த அப்பாஸுக்கு ரூ.15 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டது. அத்துடன் அவருக்கு நீதிமன்றம் கண்டனமும் தெரிவித்துள்ளது.

கடந்த நவம்பர் மாதம் முதல் இந்திய அணியின் பந்து வீச்சுப் பயிற்சியாளராக அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த புரூஸ் ரீட் இருந்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டு

# பாடசாலைகள் கிரிக்கெட் போட்டி; யாழ்.இந்து இனிங்சால் வெற்றி!

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்துக்கல்லூரி மைதானத்தில் கடந்த வெள்ளி, சனி ஆகிய இரு தினங்களிலும் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில், ஸ்ரான்லிக் கல்லூரி அணியினை யாழ்.இந்துக் கல்லூரி இனிங்சாலும், 94 ஓட்டங்களினாலும் வெற்றிகொண்டது.

மேற்படி போட்டியின் ஓட்ட விபரங்கள் வருமாறு:

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லிக் கல்லூரி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 71 ஓட்டங்களை மட்டும் பெற்றது. இதில், ஜதீஸ் 53 ஓட்டங்களை அணிக்குப் பெற்றுக் கொடுத்தார்.

யாழ்.இந்துக் கல்லூரியின் அணித்தலைவர் பகீதரம் 29 ஓட்டங்களைக் கொடுத்து 7 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்.இந்துக் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 258 ஓட்டங்களினைப் பெற்றது.

இதில், தர்சன் ஆட்டம் இழக்காமல் 67 ஓட்டங்களினைப் பெற்றுக்கொண்டார். ஸ்ரான்லி வீரர் கஜதீபன 76 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இதனைத் தொடர்ந்து இரண்டாவது இனிங்சை ஆடிய ஸ்ரான்லிக் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 93 ஓட்டங்களை மட்டும் பெற்றதால், இன்னிங்சாலும் 94 ஓட்டங்களினாலும் யாழ்.இந்துக் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

இரண்டாவது இனிங்சில் யாழ். இந்துக் கல்லூரி அணியின் சார்பில் பகீதரம் 38 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், ஜனார்த்தனன் 10 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

(58)

## உடுப்பிட்டி அ.மி.கல்லூரி செல்லையா இல்லம் முதலிடம்

(யாழ்பாணம்)

உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அதிபர் கி.நடராஜா தலைமையில் இடம்பெற்றது.

இந்தப் போட்டியில், செல்லையா இல்லம் (பச்சை) 361 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும், 241 புள்ளிகளைப் பெற்ற நியூட்டன் இல்லம் (நீலம்) இரண்டாம் இடத்தையும், 206 புள்ளிகளைப் பெற்ற பிறவுண் இல்லம் (சிகப்பு) மூன்றாம் இடத்தையும் .193 புள்ளிகளைப் பெற்ற பிக்னல் இல்லம் (மஞ்சள்) நான்காம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்பாணம்)

ஸ்கந்தவரோதயா கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அதிபர் சிவாஜி தலைமையில் நாளை பி.ப. 2 மணிக்கு இடம் பெறவுள்ளது. இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக உடுவில் பிரதேச செயலர் கலந்து கொள்வார்.

(72)

# பாடசாலை மட்ட கிரிக்கெட் போட்டி; மூவர் சதம் அடித்துச் சாதனை!


யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு இடையில், ஆரம்பமாகிக் கடந்த இரு வாரமாக நடைபெற்று வருகின்ற கிரிக்கெட் போட்டியில் மூன்று பாடசாலை மாணவர்கள் சதம் அடித்துச் சாதனை படைத்துள்ளனர்.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி வீரர் ஏ.லூட்சன் யூனியன் கல்லூரி அணிக்கு எதிரான போட்டியில் ஆட்டம் இழக்காமல் 125 ஓட்டங்களையும்,

யாழ்.மத்திய கல்லூரி அணி வீரர் ப.ரஜீவ்குமார் மானிப்பாய் இந் துக்கல்லூரி அணிக்கு எதிரான போட்டியில் ஆட்டம் இழக்காமல் 102 ஓட்டங்களையும்,

யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி வீரர் எஸ். கிருஷ்ணகுமார் யூனியன் கல்லூரி அணிக்கு எதிரான போட்டியில் 114 ஓட்டங்களைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளனர். (58)

# ம.தி.மு.க. போட்டியிடும் தொகுதிகளும் வேட்பாளர்களும்



(சென்னை)

தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்றுள்ள ம.தி.மு.கவுக்கு சிவகாசி, திருச்சி, வந்தவாசி, பொள்ளாச்சி ஆகிய நான்கு நாடாளுமன்ற தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. 4 தொகுதிகளிலும் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

சிவகாசிதொகுதியில் ம.தி.மு.க.பொதுச் செயலாளர் வைகோ மீண்டும்போட்டியிடுகிறார். திண்டிவனம் தொகுதியல் போட்டியிட்டு வெறறி பெற்ற ம.தி.மு.க. துணை பொதுச் செயலாளர் செஞ்சி ராமச்சந்திரன் தற்போது வந்தவாசி தொகுதியில் போட்டியிடுகிறார். திண்டிவனம் தொகுதி பா.ம.கவுக்கு ஒதுக்கப்பட்டுவிட்டது.

பழனி தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற ஈரோடு கணேசமூர்த்திக்கு மீண்டும் அதேதொகுதி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், பழனி தொகுதி காங்கிரசுக்கு ஒதுக்கப்பட்டுவிட்டது.

அதேபோல, முன்னாள் மத்திய அமைச்சரும ம.தி.மு.க. பொருளாளருமான கண்ணப்பன் திருச்செங்கோடு அல்லது கோவை தொகுதியில் போட்டியிடுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அந்த 2 தொகுதிளும் ம.தி.மு.கவுக்கு ஒதுக்கப்படவில்லை.

திருச்சி தொகுதியில் ம.தி.மு.க. அவைத் தலைவர் எல்.கணேசன் போட்டியிடுகிறார். தஞ்சை தொகுதியில் போட்டியிட அவர் விரும்பினார். ஆனால், அந்தத் தொகுதி தி.மு.கவுக்கு ஒதுக்கப்பட்டுவிட்டது.

ஏதாவது, ஒரு தனித் தொகுதியை ம.தி.மு.க. எடுத்துக்கொள்ள வேண்டும் என்று தி.மு.க. தலைமை கூறியதால் பொள்ளாச்சி தொகுதி ம.தி.மு.கவுக்கு மீண்டும் ஒதுக்கப்பட்டது. தற்போது, அந்த தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக டாக்டர் கிருஷ்ணன் உள்ளார். இதனால், அந்தத் தொகுதி டாக்டர் கிருஷ்ணனுக்கே ஒதுக்கப்படுகிறது. முன்னாள் மத்திய அமைச்சர் கண்ணப்பனுக்கு எந்தத் தொகுதியும் வழங்கப்படவில்லை.

# மயிலாடுதுறை வழக்கில் வைகோவுக்குப் பிணை!

(நாகபட்டனம்)

தமிழ்நாடு மயிலாடுதுறையில் கடந்த 1984 ஆம் ஆண்டு தேர்தல் பிரசாரத்தின்போது, அ.தி.மு.கவினர் தாக்கப்பட்டது தொடர்பான வழக்கில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோவுக்கு நாகபட்டணம் மாவட்ட கூடுதல் அமர்வு நீதிமன்றம் பிணை வழங்கியது.

1984 ஆம் ஆண்டு நடந்த தேர்தல் பிரசாரத்தின்போது, அ.தி.மு.கவினர் சென்ற வான் மீது தி.மு.கவினர் தாக்குதல் நடத்தினர். இது தொடர்பாக அப்போது தி.மு.கவில் இருந்த வைகோ, கோ.சி.மணி உள்ளிட்டோர் மீது வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கில் பிணை கோரி வைகோ மனு தாக்கல் செய்தார். மனுவை விசாரித்த நாகை மாவட்ட கூடுதல் அமர்வு நீதிமன்றம் வைகோவுக்கு பிணை வழங்கியது.

வைகோ மீதுள்ள மற்றொரு வழக்கான பொடா வழக்கிலும் பிணை கிடைத்தால் வைகோ விடுதலையாவார்.

## கிறிஸ்தவக் கல்லூரியில் அதிபர்கள் தினம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கிறிஸ்தவ கல் லூரியின் அமரத்துவம் அடைந்த அதிபர்கள் தினம் அண்மையில் அனுஷ்டிக்கப்பட்டது.

அதிபர் ந.சிவகடாட்சம் தலை மையில் நடைபெற்ற இந்த வைபவத் தில், வறுமைக் கோட்டின்கீழ் கலவி கற்கும் மாணர்களுக்கு உதவுவதற் கென அமரர் கார்த்திகேசு நிதியம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. (17)

## புதிய நிர்வாகசபைத் தெரிவு

கரவெட்டி பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோ கத்தர் மன்ற புதிய நிர்வாகசபைத் தெரிவு - கடந்த 26 ஆம் திகதி மு.ப.11 மணிக்குக் கரவெட்டி பிர தேசசெயலக மாநாட்டு மண்டபத் தில் நடைபெற்றது. உதவிப் பிர தேசசெயலர் வீ.வீரபத்திரபிள்ளை மற்றும் சமுர்த்தி முகாமையாளர் முன்னிலையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட் டோர் விபரம் -

தலைவர் - ஆ.மதியரசன், உப தலைவர் - பொ.குகதாஸ், செய லாளர் -த.வனிதாதேவி, உபசெய லாளர் - எஸ்.கிருஷ்ணலிங்கம், பொருளாளர் - கமலக்கண்ணன் மஞ்சுளா. (116)

# பொஸ் அழகுக்கலை நிலையம் நடத்தும் அழகுக்கலை தொடர்பான கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

பொஸ் அழகுக்கலை நிலை யம் நடாத்துகின்ற அழகுக்கலை தொடர்பான கண்காட்சி - யாழ்.மத் திய கல்லூரியில் நடைபெறுகின்றது.

நேற்றுக் காலை ஆரம்பமான இந்தக் கண்காட்சி - மாலை 8 மணி வரை நடைபெற்றது. தொடர்ந்து இன்று மாலை 3 மணிக்கு மீண்டும் ஆரம்பமாகி, இரவு எட்டு மணிவரை நடைபெறவுள்ளது.

ரோசினி மருதவாணன், ஆனந்த ரமணன் ஆகியோரின் முயற்சியின் காரணமாக - யாழ்ப்பாணம், திரு கோணமலை ஆகிய மாவட்டங்க ளிலிருந்து இந்த அழகுக்கலை தொடர்பான பொருட்கள் பெறப்பட் டுள்ளன. கண்காட்சியினை நடத்த வென அந்தப் பகுதிகளில் பெண் கள் வரவழைக்கப்பட்டுள்ளனர்.

கண்காட்சியில் வைக்கப்பட்ட பொருட்கள் யாவும் நீண்ட நாட்க ளாகச் செய்யப்பட்டவை அல்ல, 2 அல்லது 3 கிழமைக்குள் செய்து கொடுக்கப்பட்டவையாகும்.

ஒரு பொருளை செய்து முடிப் பதற்குப் பல நாட்கள் பிடிக்கும். திருமணப் பெண்ணை அலங்கரிப்ப தற்கும், ஜசிங் கேக் முதலியவற்றை வடிவமைப்பதற்கும் பெருமளவு பணம் அறவிடப்படுகின்றது.

இத்தகைய ஒரு சூழலில் அவற்றை யாருமே இலகுவாகச் செய்வதற்கு வழிவகை செய்து கொடுப்பதாக இந்தக் கண்காட்சி நடத்தப்பட்டதாக ஏற்பாட்டாளர் கள் தெரிவித்தனர்.

இந்தப் பொருட்களை ஒரு கைத் தொழில் நடவடிக்கையாகவும் கொண்டு - பொருளாதார அபிவிருத்தி யிலும், வளர்ச்சியிலும் யாழ்குடா நாட்டை உயர்த்தமுடியும். ஏற்று மதி வருவாய்களை அதிகரிக்கமுடி யும் என்றும் அவர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

கண்காட்சியில் பல்வேறு வகை யான அழகுசாதனப் பொருட்கள் - பயன்படுத்தமுடியுமா என விசப்பட்ட பொருட்களின் ஊடாகச் செய்து வைக்கப்பட்டுள்ளன.

பெண்கள் திருமணக் கோலத் தில் எவ்வாறு இருப்பார்கள் என்ற விடயத்தை - பிரதேசங்கள், இனங் கள், மதங்கள் வாயிலாக வெளிப் படுத்தும் வகையில் அலங்காரங் களுடன் பெண்கள் காணப்படுகின் றார்கள்.

கண்காட்சியின் முடிவில் - இந் தப் பொருட்களை எவ்வாறு செய் வது என்பது பற்றிய கருத்து, விளக் கங்களும் அளிக்கப்படவுள்ளன.

## நாவலின் அறிமுகவிழா

(யாழ்ப்பாணம்)

'யுத்தத்தின் முதல் அதிகாரம்' என்ற தேவகாந்தன் எழுதிய நாவ லின் அறிமுக விழா நேற்று காலை இடம்பெற்றது.

ஆரியகுளத்தில் அமைந்துள்ள எழுத்தாளர் ஒன்றியத்தில் நடை பெற்றவிழாவில் - சிறுகதை ஆசிரி யர் செம்பியன் செல்வன் தலைமை தாங்கி, நூலினை அறிமுகஞ் செய்து வைத்தார். நூலின் ஆய்வுரைகளை சட்டநாதன், சிவஞானசுந்தரம், யேசு ராசா ஆகியோர்நிகழ்த்தினர்.

ஏற்கனவே கனவுச்சிறை என்ற நாவலையும் இந்த நாவலாசிரியர் சென்னையில் வெளியிட்டு இருக்கி றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மருதடி ஆலய புனரமைப்பு வேலைகள் விரைவில்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயப் புனரமைப்புக்கான வேலைகள் - வைகாசி மாதமளவில் ஆரம்பிக்கப் படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

புதிதாக அமைக்கப்படவுள்ள கர்ப்பக் கிரகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம் என்பன கருங்கல் லினால் அமைக்கப்படவுள்ளன. இதற் கான கருங்கற்களைப் பொழிந்து அழகுபடுத்தும் வேலைகள் தற் பொழுது ஆலயத்தில் நடைபெற்று வருகின்றன. (101)

## கோட்டக்கல்வி அதிகாரி பதவிக்கு விண்ணப்பம்

தீவக கல்வி வலயத்தின் ஊர் காவற்துறை கோட்டக் கல்வி அதி காரி பதவிக்கும், உதவிக் கல்விப் பணிப்பாளர் (முறைசாராக் கல்வி) பத விக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட் டுள்ளன. இந்தப் பதவிக்கு இலங்கைக் கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த வர்களும், அதிபர் சேவையைச் சேர்ந்த தரம் 1, தரம் 2-1 ஐச் சேர்ந்த வர்களும் விண்ணப்பிக்கமுடியும்.

விண்ணப்பிப்பவர்கள் தமது சுய விபரங்கள் அடங்கிய விண்ணப் பத்தை, இரு பிரதிகளில் தயா ரித்து - வலயக் கல்வி அலுவலகத் தில் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு வல யக் கல்விப் பணிப்பாளர் பொ. வேணுகோபால் அறிவித்துள்ளார்.

### ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில்

# கிளிநொச்சி மாவட்டத்தில் சித்திபெற்ற மாணவர்கள்

(ஆழியவளை)

கடந்த வருடம் நடைபெற்ற ஐந் தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட் சையில் கிளிநொச்சி மாவட்ட பாட சாலைகளில் 73 மாணவர்கள் சித் தியடைந்துள்ளனர். பாடசாலைரீதி யாகச் சித்தி பெற்ற மாணவர் விப ரம் வருமாறு -

இராமநாதபுரம் மகா வித்தியா லயம் - 03, கிளிநொச்சி மகா வித்தி யாலயம் - 10, புனித திரேசா பெண் கள் கல்லூரி - 05, திருவையாறு மகா வித்தியாலயம் - 10, கிளி நொச்சி கனகபுரம் மகா வித்தியால யம் - 01, அக்கராயன் அ.த.க. பாட சாலை - 02, கிளிநொச்சி மத்திய கல்லூரி 04, ஐயனார்புரம் அ.த.க. பாடசாலை - 03, கிளிநொச்சி புனித பற்றிமா றோ.க - 01, ஸ்கந்தபுரம் அ.த.க.பாடசாலை - 04, இராமநாத புரம் அ.த.க.பாடசாலை - 01, சிவ நகர் அ.த.க.பாடசாலை - 02, ஊற் றுப்புலம் அ.த.க.பாடசாலை - 01, கனகாம்பிகைக்குளம் மகா வித்தி யாலயம் - 03, வன்னேரிக்குளம் மகா வித்தியாலயம் - 01, முழங் காவில் மகா வித்தியாலயம் - 08, கிராஞ்சி அ.த.க.பாடசாலை - 01, பூந கரி நல்லூர் அ.த.க.பாடசாலை-3, முருகானந்தா மகா வித்தியாலயம்- 03, இராமநாதபுரம் கிழக்கு அ.த.க. பாடசாலை - 01, தருமபுரம் மகா வித்தியாலயம் - 02, பளை மத்திய கல்லூரி - 02, பளை றோ.க.த.க.பாட சாலை - 01, சேமமடுகேணி அ.த. க.பாடசாலை - 01. (122)

## கல்வி நிர்வாக சேவையில் 240 வெற்றிடங்கள்

வடக்கு - கிழக்கு மாகா ணத்தில் உள்ள மாகாணக்கல்வி அமைச்சு மற்றும் 24 கல்வி வல யங்களிலும் கல்வி நிர்வாக சேவை யில் 240 பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

இந்தமாகாணத்தில் கல்வி நிர் வாக சேவையில் தரம் 1,2,3 பதவி களில் 364 பேர் தேவையாக இருந்த போதும், தற்போது 124 பேர் மாத்திரமே கடமையிலீடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (122)

## கடை உடைத்துத் திருட்டு

அத்தியடிச் சந்தியில் உள்ள கடை அண்மையில் உடைக்கப் பட்டு அங்கிருந்த பெறுமதியான பொருட்கள் மற்றும் பணம் என் பவை திருடப்பட்டன.

நாவலர் வீதி அத்தியடிச் சந் தியில் செல்வம் என்பவரின் கடையே பின்புறமாக உடைக்கப் பட்டு சிகரட் பைக்கற்றுக்கள், நெஸ்ரமோல்ட், நெஸ்பிறே பைக் கட்டுகள் உட்படபெறுமதியான பொருட்களும் ஒரு தொகைப் பண மும் திருடப்பட்டுள்ளது. மேற்படி திருட்டினால் சுமார் ஒரு லட்சம் பெறு மதியான இழப்பு கடை உரிமையா ளருக்கு ஏற்பட்டுள்ளது. (55)

### இந்து கலாசார அமைச்சினால்

# இந்த ஆண்டும் 25 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படும்

(மட்டுவில்)

இந்து கலாசார அமைச்சினால் 2 ஆம் உலக இந்துமகாநாடு ஞாபகார்த்தமாக அமைக்கப்படும் வீடமைப்புத் திட்டத்தின் கீழ், இந்த ஆண்டு 25 வீடுகள் அமைக்கப்பட வுள்ளன. மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் 20 பயனா ளிகளுக்கும், பருத்தித்துறையில் 4 பயனாளிகளுக்கும், சாவகச்சேரியில் ஒரு பயனாளிக்கும் இந்த ஆண்டு வீடுகள் அமைக்கும் பணிகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளன.

கடந்த வருடமும் இந்தத் திட் டத்தின் கீழ் 131 வீடுகள் அமைக் கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பிரதேச செயலர் பிரிவுரீதியாகக் கடந்த ஆண்டு அமைக்கப்பட்ட வீடு களின் எண்ணிக்கை வருமாறு-

சாவகச்சேரி - 21, நல்லூர் - 12, சங்கானை - 10, உடுவில் - 10, தெல்லிப்பளை - 12, சண்டிலிப் பாய் - 25, கோப்பாய் - 11, காரை நகர் - 30. (24)

# வெளிநாட்டு அதிகாரியொருவரின் இலத்திரனியல் பொருட்கள் களவு

## யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டு நிறுவன அதிகாரியொருவரின் விடுதியிலிருந்து பெறுமதி வாய்ந்த இலத்திரனியல் பொருட்கள் களவு போயுள்ளதாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 29 ஆம் திகதி இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது - இரவு பத்துமணியளவில் அலுவகத்திலிருந்து உரிய வெளிநாட்டு நிறுவன அதிகாரி தனது விடுதிக்குச் சென்று பார்த்தபோது, யன்னல கம்பி பிரிக்கப்பட்டு - சிடி பிளேயர் உட்பட பெறுமதியான இலத்திரனியல் பொருட்கள் திருட்டுப் போயுள்ளமையை அவதானித்துள்ளார். உடனடியாக இது தொடர்பாக யாழ்.பொலிஸாருக்கு அறிவித்தார். சம பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் - இது தொடர்பான சாட்சியங்களைப் பதிவு செய்ததுடன், விசாரணைகளையும் மேற்கொண்டுவருகின்றனர். (ச)


## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### முதலாவது அகவையில்



பெயர் : உ.கிருசிகா
முகவரி : அராலி மத்தி, வட்டுக்கோட்டை.

### நான்காவது அகவையில்



பெயர் : பா.நிதர்ஷன்
முகவரி : 37/51 1 ஆம் ஒழுங்கை பிறவுன் வீதி


# சின்னக்கடை மீன்சந்தையில் சுகாதாரச் சீர்கேடு அதிகரிப்பு !

(யாழ்ப்பாணம்)

யாழ்.சின்னக்கடை மீன் சந்தைப்பகுதியில் ஈக்களின் பெருக்கம் அதி கரித்துக் காணப்படுகிறது. அதனால், ஈக்களின் எச்சங்களால் சுகாதார சீர்கேடு அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடலுணவு, மற்றும் மாட்டு இறைச்சிக் கழிவுகள் தொட்டிகளில் தேங்கி கிடப்பதால், அவற்றிலிருந்து துர்நாற்றம் வீசிவருகிறது.

சந்தைப் பகுதியைத் துப்பரவு செய்யும் பணி ஒரு தடவை மாத்திரம் நடைபெறுவதால், ஏனைய நேரங்களில் அகற்றப்படுகின்ற கழிவுகளால் அசௌரியங்கள் ஏற்படுவதாகவும் புகார் கூறப்படுகிறது.

அதேவேளை, தொற்றுநீக்கி மருந்துகள் விசிறப்படுவதும் குறைந் துள்ளதால், நோய்க்கிருமிகளின் தாக்கம் அதிகரித்து வருகிறது.

கொள்வனவு செய்யப்பட்ட கடலுணவு வகைகளில் புழுக்கள் காணப்ப டுவதால், பாவனைக்கு உதவாமல் வீசுகின்ற நிலைமையும் பலருக்கு ஏற பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (206)

# வடமராட்சி கிழக்கு மாணவர்களுக்கு கணினி தொடர்பான செயலமர்வு

தமிழீழ மாணவர் அமைப்பி னால் - வடமராட்சி கிழக்கு மாண வர்களுக்குக் கணினி சம்பந்தமான செயலமர்வு தற்போது நடாத்தப் பட்டு வருகின்றது.

மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் நடை பெற்று வரும் இந்தச் செயலமர்வில், பல்கலைக்கழக விரிவுரையாளர்க ளினால் பயிற்சி வழங்கப்பட்டு வரு கின்றது.

இந்தப் பிரதேசத்திலுள்ள க.பொ.' த.உயர்தர, சாதாரணதர மாணவர் களும், ஆசிரியர்களும் பங்கு பற்றி வருகின்றனர். இந்தச் செயலமர்வு கடந்த 28 ஆம் திகதி தொடக்கம் இந்த மாதம் 8 ஆம் திகதிவரை 10 நாட்கள் நடைபெறவுள்ளன. கணினி தொடர்பான அறிமுகவுரை யினைத் தமிழீழ மாணவர் அமைப் புப் பொறுப்பாளர் ராணிமைந்தன் ஆற் றினார். சிறப்புரைகளைக் கடற்புலி களைச் சேர்ந்த விநாயகமும், அதிபர் அ.சா.அரியகுமாரும் ஆற்றினர். (122)

## பிள்ளையார் மண்டபத்தின் அடிக்கல் நாட்டுவிழா

(வடமராட்சி)

தென்புலோலி ஸ்ரீ (முதலி) மனோன்மணி அம்பாள் ஆலயத் தில் புதிதாக நிர்வமாணிக்கப்பட வுள்ள பிள்ளையார் மண்டபத்திற் கான அடிக்கல் - எதிர்வரும் 5 ஆம் திகதி வியாழக்கிழமை 1 மணியள வில் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸவரன் நாட்டிவைப்பார். அன்று நண்பகல் அன்னதானமும் வழங்கப்படும். (17)

# தாயகம் திரும்பிய குடும்பங்களுக்கு தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

கியூடெக் நிறுவனத்தின் 'இடம் பெயர்ந்த மக்களுக்கான மீள்குடிய மர்வுத் திட்டத்தின் கீழ்' இந்தியா விலிருந்து மீள்குடியமர்ந்த நெடுந் தீவு பகுதி மக்களுக்குக் கடந்த புதன்கிழமை தொழில் உபகரணங் கள் வழங்கப்பட்டன.

30 மீனவக் குடும்பங்களுக்கான மீன்பிடி உபகரணங்களும், 18 விவ சாயக் குடும்பங்களுக்கான விவசாய உபகரணங்களும் வழங்கப்பட்ட துடன், விவசாய சங்கங்களின் மூலம் பராமரிப்புச் சேவை வழங்க வென 3 நீர் இறைக்கும் இயந்தி ரங்களும், 4 தெளிகருவிகளும் வழங்கப்பட்டன.


இதேவேளை, மீன்பிடி உபகரணங் களைப் பெற்றோர், மானிய விலை யின் அடிப்படையில் தவணைமுறை யில், அதன் பெறுமதியைக் கடற் தொழிற்சங்கத்திற்குக் கட்டவேண்டும். இதன்மூலம், ச கம் வளர்ச்சியடை வதுடன், மேலும் பல வசதிகளை சங்கமே மேற்கொள்ளமுடியும் என் பதனால், இந்த நடைமுறையினை நெடுந்தீவு கடற்தொழிற் சங்கத்தி னர் செயற்படுத்தியுள்ளனர். (113)

## பாடசாலை அபிவிருத்திச் சங்க பொதுக்கூட்டம்

யாழ்.மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின், பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக் கூட்ட மும், இந்த ஆண்டுக்கான புதிய நிர வாகத் தெரியும் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 7 ஆம் திகதி பி.ப.3 மணிக்கு பாடசாலை அதிபர் அ.மு. அருணாசலம் தலைமையில் இடம்பெற வுள்ள அபிவிருத்திச் சங்கக் கூட்டத் தில் - பாடசாலையின் அபிவிருத்தி தொடர்பான திட்டங்கள் முன்வைக் கப்படவுள்ளது. இந்த ஆண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவும் இடம் பெறவுள்ளதாகப் பாடசாலை அதிப ரும், பாடசாலை அபிவிருத்திச் சங் கத் தலைவருமான அ.மு.அருணா சலம் தெரிவித்தார். (91)



# சூடாத மலர்(கள்)

தொடர்கதை

அங்கம் - 3

**பூ.நகுலன்**

தனிமையிலிருந்து பலவாறு யோசித்தாள். என்னடா இவன் என்னைக் கேட்டதோடு இராமல் தன்னுடைய அம்மா விட்டையும் தன் நண்பர்களிட்டையும் போய்ச் சொல்லிப் போட்டானே. தம்பி இதோடை இதை விட்டிடு எண்டுதானே அண்டைக்கு நான் சொல்லிவிட்டனான். தன் வயது அவன் வயது வேறுபாடெல்லாம் விளக்கமாகக் கூறினேனே. என்று தன்னளவில் அவள் யோசித்துத் தனிமையில் அழுது, வீட்டில் எப்பவும் தனிமையை நாடிக் கொண்டு இருந்தாள்.

அவள் தனிமையில் இருந்து அழுவதற்கும் காரணம் இருந்தது. தன்னுடைய பெரியதாயார் இவளின் கதையைக் கேட்ட போது, இவளிடம்நடந்துகொண்டவிதம். அது பற்றியும் யோசித்தாள். இதெல்லாம் பெரிய கதையெண்டு என்னட்ட சொல்லவந்திட்டாய் அவன் கேட்டானாம், இவள் வந்து என்னட்டச் சொல்லுறாளாம். அவன்ரை வயதென்ன. உன்ரை வயதென்ன என்று, பெரியதாயார் கூறிய வார்த்தைகள் அவள் மனதில் அடிக்கடி வந்து பயமுறுத்தின. வெளியார் யாரேனும் கேள்விப்பட்டாலும் இதைத்தானே கூறுவினம் என்ற யோசனை அவள் மனதில் இருந்தது.

தன்னுடைய பெரிய தாயே இப்படிக் கூறுகிறார் என்றால், ஊரிலுள்ளவர்கள் எப்படிக் கூறுவார்கள். தன்னைப் பற்றி எப்படிக் கருதுவார்கள். தான் இவ்வளவு காலமும் திருமணம் ஆகாமல் இருந்தது, இந்தப் பொடிப்பயல் என்னை இப்படியெல்லாம் கேட்கவா. இவனுடைய தாயார் என்னை என்னவென்று நினைத்துக்கொண்டார்.

நான் அவ்வாறான பெண் என்றால், இவ்வளவு காலமும் இப்படி இருந்திருப்பேனா. என்னுடைய தம்பியாரிடமும், என னுடைய வீட்டுக்கும் எத்தனை ஆண்கள் வருகின்றார்கள். இவர்களில் ஒருவரைக் காதலித்திருக்கமாட்டேனா, என்னுடைய பெற்றோர் எனக்கு மணமாலை சூடித்தருவார்கள் என்றுதானே நம்பியிருந்தேன். இப்படியாகத் தன் மனத்தில் பல்வேறான எண்ணங்களுடன் இருந்தாள் என்பதை விடவும் - அவள், மனதில் தோன்றிய எண்ணங்களினால் தவிர்த்தாள் என்றுதான் கூறவேண்டும்.

அன்றைக்கு அவள் காலையில் எழுந்தாள். இவ்வாறானா ஒரு சூழலில் அவள் நித்திரைவிட்டு எழுந்தபோதே தலையில் ஏதோ வலி ஏற்பட்டதுபோன்ற உணர்வு தோன்றியது எனினும், அவள் எழுந்து வழமைபோலவேதன் கடமைகளை முடித்துக்கொண்டாள். பூமரங்களுக்கு அருகில் சென்றாள். பூக்களைப் பறித்தாள், அவற்றைக் கூடைக்குள் போட்டாள். மலர்களை மாலையாகத் தொடுக்கும் போது தான் அவளுடைய கைகள் வழமையான செயலைச் செய்ய மறுத்ததை உணர்ந்தாள். எவ்வளவு முயன்றும் நேர்த்தியான மாலையை அவளால் கட்டமுடியவேயில்லை. அரை குறையாகக் கட்டி முடிக்கப்பட்ட மாலையையும் மீதமாக எஞ்சியிருந்த பூக்களையும் எடுத்துக்கொண்டாள். அவற்றை ஒரு பையினுள் போட்டுக்கொண்டாள். வழமையாகத்தன் தாயாரிடம் கூறுவது போல, கோயிலுக்குப் போட்டு வாறன் என்று கூறிவிட்டுப் அவள் கோயிலுக்குச் சென்றாள்.

இவளுடைய தாயாரும் இவளென்ன இப்படிக் கொஞ்ச நாளாக ஒரு மாதிரி இருக்கிறாள். வழமைபோல இல்லையே. சாப்பாடும் சாப்பிடுகிறது குறைவு. இவளுடைய நடத்தையிலை கொஞ்சம் வித்தியாசம் இருக்கிறதே. தனியத்தனியப் போயிருக்கிறாள் என்று தன் மனதில் எண்ணிக்கொண்டார். இது பற்றி ஒருக்காக் கேட்கவேணும். கோயிலுக்குத்தானே போறாள். கோயிலாலைவரட்டும் பிறகு கேட்பம் என்ற சிந்தனையில் தன்னுடைய வேலைகளில் அவள் மூழ்கிப்போனாள்.

அவள் தாயார் அப்படி நினைத்தபோது, அதற்கு மாறாகச் செயல்கள் நடக்கும் என்று அவள் ஒரு போதும் எண்ணியிருக்கவில்லை. அவள் கோயிலுக்குச் சென்றபோது நடந்து சென்றாள். அவ்வாறு சென்ற போது ஏதோ ஒரு உணர்வு உந்தப் பெற்றவளாக வேகமான நடைநடந்துசென்றாள். வழமையான நடையைவிடவும், மிகவும் வேகமாக அவள் கோயிலுக்குச் சென்று கொண்டிருந்தாள். அவள் தன்னுடைய உணர்வில் இல்லை. ஆலயத் துக்குச் சென்ற அவள் ஐயரிடம் மாலையைக் கொடுத்தாள். ஆலய மண்டபத்திலிருந்து உரக்கக்கத் தினாள். அவளுடைய வார்த்தைகளை அந்த ஆலய வீதியால் சென்றுகொண்டிருந்த அனைவரும் ஒரு முறை திரும்பிப்பார்த்துச் சென்றனர். அவ்விதமாக அவள் மன நிலையில் மனத்தில் வந்த கருத்துக்களை எல்லாம் கூறிக்கொண்டிருந்தாள்.

திடீரென்று எழுந்தாள். ஆலய வீதியில் மாபிள் அடித்துக்கொண்டிருந்த சிறு பையன்களின் அருகே வந்தாள். அந்தச் சிறுபிள்ளைகளிற்கு கீழே இருந்த கற்களால் பொறுக்கி எறிந்தாள். சிறுவர்களும் இவளுடைய இந்தச் செய்கையைக் கண்ணுற்றவர்களாய் அவளுக்கு வேடிக்கை காட்டிக் கொண்டிருந்தனர். அவள் சிறுவர்களைத் துரத்துவதும் கல்லால் எறிவதும் என, ஆலய வெளிவீதிகளில் ஓடிக்கொண்டிருந்தாள். அவளுடைய கையில் ஒரு சிறுவன் அகப்பட்டான். அவனைத் தன்னுடைய கைகளில் பிடித்த அவள் அந்தச் சிறுபையனிடம் கேட்டாள். நான் யார்? என்னுடைய அவன் எங்கே? அவனிட்டைக் கொண்டு போய் விடு. என்னைப் படைச்ச ஆண் டவன் எனக்கு என்ன செய்தான். என் ஊர் எது? என் பெயர் எது? நீ யார்? சொல்லு சொல்லு என்று உலுப்பினாள். அந்தச் சிறுவன் ஒரு மாதிரி அவள்பிடியிலிருந்து தப்பி ஓடிவந்து அவளின் வட்டாரிடம் நடந்த விடயங்களையும், ஆல யத்தில் இவள புரியும் அட்டகாசங்களையும் விளக்கமாகக் கூறினான்.

வீட்டார் ஆலயத்திற்குச் செல்ல முன்னர் அவள் ஆலயத்திற்கு அருகிலிருந்த இரண்டு வீடுகளுக்கச் சென்று, அங்கிருந்தவர்களிடம் நான் யார்? என்றும், வெளிநாடு சென்ற அவன் எங்கே? அவனிட்டை கொண்டு போய்விடு. அவனை உடனே கூட்டிக்கொண்டுவரவேண்டும். என்றும் பல்வேறு வினாக்களைத் தொடுத்த வண்ணம் இருந்தாள். அவளுடையவீட்டார், அவளிடம் அணுகி வீட்டுக்கு வாம்மா என்று அழைத்தனர். ஆனால், அவள் வீடடுக்கு வர அடம்பிடித்தாள். அவள் ஒவ்வொரு வீடு வீடாகப் போவதற்கு எத்தனித்தாள். ஆடைகளும் கசங்கப்பட்ட நிலையில் நிலத்திலிருந்த புழுதியும் அவள் ஆடையில் காணப்பட்டது. வீட்டாருக்கோ என்ன செய்வதென்ற நிலைமை. ஆலயத்துக்குச் செல்லும்போது, என்னமாய்ச் சென்றாள். இவளுக்கு என்ன நேர்ந்தது என்ற சிந்தனையில், நடந்துகொண்டு சென்ற அவளை அவளின் தங்கை கையிலும், அவளுடைய தம்பி காலிலும் எனப் பிடித்த வண்ணம் தூக்கிக் கொண்டு வந்தனர்.

இவ்வாறு வீட்டிற்கு தூக்கி வரப்பட்ட அவள், பலவாறு அழுது ஆர்ப்பாட்டம் புரிந்தாள். தன் வீட்டிலுள்ளவர்களைப் பார்த்து என்னை அவனிடம் கூட்டிக் கொண்டு போகவேண்டும். அவனைத் தான் நான் திருமணம் செய்துகொள்வேன். அவன் தான் என்னுடைய கணவன் என்று கூறி, சிரிப்பதும், பின்னர் ஒரு மூலையில் தன்னுடைய கண்களை வைத்த வண்ணம் இருப்பதும், பின்னர் அழுவதும் என இருந்தாள். அவளிற்குச் சாப்பாடு கொடுத்தபோது, அவள் அதைத் தூக்கித் தூரத்தில் எறிந்தாள், பெரிதாகச் சிரித்தாள் எனக்குச் சாப்பாடு எதற்கு? அவன் பார்வை ஒன்றே போதும், அவனைக் கூட்டிவா என்று தன் உறவினர் ஒவ்வொருவரிடமும் கூறினாள். ஒருவாறாக அவள் வீட்டாரும் அவனைக் கூட்டிவருகின்றோம், சாப்பிடு என்று கூறி அவளுக்கு உணவினை ஊட்டினார்கள். அவள் கொஞ்சம் கொஞ்சமாக தன்னிலை அடைந்து சாப்பிட்டாள் சாப்பிட்டவுடனே நித்திரை கண்களை வந்து மயக்கவே, நித்திரைக்குச் சென்றாள்.

இவளுடைய வீட்டார் ஒவ்வொரு நாளும் தங்கள் படலையைக் கட்டிவிட்டுத்தான் படுப்பார்கள் இரவு 12 மணி இருக்கும் போது, அவள் திடீரென எழுந்து ஓடினாள். இதையாருமே எதிர்பார்க்கவில்லை படலைவரையும் அவளால் ஓட முடிந்தது. படலை கட்டப்பட்டிருந்ததால் பின்னால் சென்றவர்களால் அவளை பிடிக்கமுடிந்தது. அவளைப் பிடித்து வந்து கேட்டபோது, அவள் அவனிடம் ஓடுவதாக கூறினாள். அவளைச் சமாதானம் செய்து ஒரு மாதிரியாக கூட்டிவந்து படுக்கவைத்தனர். அவள் நித்திரை கொண்டாள். ஆனால், அவள் குடும் பத்தால் நித்திரை கொள்ள முடியவில்லை அன்றிலிருந்து அவர்களுக்குச் சிவராத்திரி தினம் தான். அவள் எப்ப எழுந்து ஓடுவாள் என்று கூறமுடியாத நிலைமை எனவே அவர்களுக்கு இந்த நிலைமை.

பகல் வேலையில் ஒரு நாள் அவள் இவ்வாறு ஓடியபோது, திரும்பப் பிடித்துக்கொண்டு வந்து வைத்திருந்தனர். அவள் அன்றைக்குப் பல தடவைகள் ஓடியதன் காரணத்தால், அரைச் சுவர் எழுப்பப்பட்ட நிலையிலுள்ள அறையில் அவளை அடைத்து வைத்தனர். அவள் அந்தச் சுவரையெல்லாம் தாண்டி ஓடிவந்து விட்டாள். ஒருவாறு மீண்டும் அவளைப் பிடித்து கயிற்றால் கட்டிவைத்திருந்தார்கள்.

இந்த நிலையில், என்ன செய்வது என்றுஇவளுடைய பெற்றோருக்குக் குழப்பமாக இருந்தபோது, அவளுடைய மாமா முறை ஒருவர் இவளுடைய வீட்டுக்கு வந்திருந்தார். இந்த நிகழ்ச்சிகளை நேரில் கண்டார். அவன் இப்படிக் கூறியதால்தான் அவள் இப்படிச் செய்கிறாளா, என்று கூறியபடி நான் அவனைக் கூட்டிக்கொண்டு வாறதுக்கு ஒரு வழிபண்ணுறன். அவன் இனிமறுத்தலும் இவளை அவனுக்குத்தான் கட்டிவைக் கிறதுக்கு வழிபார்ப்பன். இந்தப் பிள்ளையின்ரை நிலையைப்பார்க்க எனக்கு மனது என்னவே செய்கின்றது. என்று கூறிய வண்ணம் அவர் சென்றார். அவ்வாறு அவளுடைய மாமா அவளின் பெற்றோரிடம் கூறிச்சென்ற காரணத்தால், தொழில் அதிபரின் வீட்டுக்குச் சென்று தொழிலதிபரைச் சந்திக்க அவர்கள் முயலவில்லை.

தொழிலதிபரைச் சந்திப்பதற்கு முன்னர் அவன் நேரில் வந்து என்ன சொல்கிறானோ, என்ற ஏக்கம் இவர்களிற்கு இருந்தது. அவளுடைய மாமா அவனை வெளிநாட்டிலிருந்து அழைப்பதற்கு உரிய ஒழுங்குகள் செய்தமையை அவளிடம் கூறி ஒருவாறு சமாதானப்படுத்தி, அவளை இயல்பு வாழ்க்கைக்குக் கொண்டுவர முயன்றார்கள் அவளுடைய பெற்றோர். அவளும் இயல்பு நிலைக்கு ஓரளவு திரும்பிக் கொண்டிருந்தாள்.

அவ்வாறு அவள் இயல்பு நிலைக்குத் திரும்பியபோது, அவளிடம் அவர்கள் பல்வேறு விடயங்களைக் கேட்டறிந்தனர். நடந்த நிகழ்ச்சிகளை அவள் கூறினாள். திருமணம் செய்வதென்றால் அவனைத் தான் திருமணம் செய்து கொள்வேன். இலலையேல் இப்படியே வாழ்நாளைக் கழித்துக் கொண்டிருப்பேன் என்பதாய் அவள் உறுதி எடுத்திருந்தாள். அவளின் மனநிலை பாதிப்புக்கு காரணமான அவனே என் கணவன் என்ற உறுதி அவளிடம் இருந்தது. அவள் அந்த உறுதியில் இருந்த ஒரு நாளில், அவளுடைய மாமா அவளின் வீட்டுக்கு வந்தார். தனியாக அவளின் பெற்றோரைக் கூட்டிச்சென்று 'அவனிடம் நான் இது விடயமாகக் கதைத்தேன். அவன் இப்படியொரு நிகழ்ச்சி நடக்கவில்லை. தான் அப்படி அவளைக் கேட்கவில்லை என்றான் என்ன செய்யிறது நான்' என்று அவர் கூறினார்.

'அவனைக் கூட்டி வந்து ஒருக்கா அவள் முன்னிலையில் சொல்லச் செல்லுங்கோ. அவன் கேட்டதை மாட்டன் என்று சொல்லும்போது எங்களால் என்ன செய்யமுடியும். ஒருக்கா இந்த உதவியைச் செய்யுங்கோ' என்று அவரை அவளின் பெற்றோர் கேட்டனர். அவரும் சென்று, ஒருநாள் திரும்பி வந்து 'அவன் அப்படி ஒன்றும் கேட்கவில்லையாம் அப்படிப் கேட்கவில்லை என்று சொல்லுவதற்கு அவன் வீட்டிற்கு வர முடியாதாம். அப்படியொண்டால் ஆலயத்திற்கு அருகிலிருக்கும் வீட்டிற்கு வரட்டாம். தான் அவள் முன்னிலையில் இதைக் கூறுகின்றானாம்'' என்று கூறியதாகச் சொன்னார்.

பெற்றோர் மிகவும் குழம்பிப் போயினர். தம் மகளுக்கு வந்த நிலையை எண்ணி வருந்தினர். அவன் மட்டும் அப்படிக் கேட்டிருந்தால் பரவாயில்லை, அவனின் தாயாருமல்லவா இவளை இப்படிக் கேட்டுவிட்டார். அவனின் தாயார் தங்களிடம் வந்து இப்படிப்பிரச்சினை என்று நேரில்சொல்லியிருந்தால், இவ்வளவு வந்திருக்காதல்லவா. என்றும் அவனின் தாயார் அவளிற்கு நேரே சொல்லியதால் அல்லவா இப்படியான நிலைமை என்றும் தமது மனதிற்குள் பொங்கிக் கொண்டிருந்தனர் அவளின் வீட்டார்.

அவனை நேரேகாண அவள் விரும்பவில்லை. இல்லை என்று அவன் கூறுவதை அவளால் தாங்கமுடியவில்லை. இப்படியும் மனிதர்கள் இருக்கமுடியுமா? ஒரு விடயத்தை கேட்டுவிட்டுப் பின்னர் மறுக்க எப்படி மனது வந்தது என அவளைக் காண மறுத்துவிட்டாள்.

(தொடரும்)

# சஞ்சிகைகளின் புதிய வரவுகள்




பெயர் - வெளிச்சம்
இதழ் - 24
விலை - 50/=

வெளியீடு - விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக்கழகம் நடுவப்பணியகம் தமிழீழம்.
கார்த்திகை - மார்கழி 2003




பெயர் - நான்
மலர் - 29 இதழ் - 01
தை - மாசி 2004
விலை - 20/=

ஆசிரியர் - போல் நட்சத்திரம்
விடயம் - உளவியல் கட்டுரை




பெயர் - நங்கை
இதழ் - 19/20
விலை - 20/=

வெளியீடு - மகளிர் அபிவிருத்தி நிலையம்
ஆசிரியர் - சரோஜா சிவச்சந்திரன்




பெயர் - உலகத்தமிழர் குரல்
ஒலி - 22
இதழ் - 19

ஆசிரியர் - ஆ.சண்முகலிங்கம்
வெளியீடு - உலகத்தமிழ்ப் பண்பாடு இயக்கம்.
விலை - 30/=

# அம்மா

எனக்குப் பசிக்கவில்லை
ஏசிவிட்டு
கோப்பையில் சோற்றினை
போட்டு
நான் அழுதபடி
சாப்பிட வைத்துவிட்டு
சிரிக்கும்!

கொட்டும் மழையில்
காதில் பிடித்து இழுத்து
அணைத்து
சேலைத்தலைப்பால்
மூடும்
தான் நனைந்தபடி!

கூடுதலான உன்சிரிப்பு
எனக்காக
கூடுதலான என் அழுகை
எனக்காக!

என்னைப்பார்க்கின்ற
உன் முகப்பார்வை
ஒவ்வொரு நாளும்
அந்திவானம் மறைகையில்
எங்கேயோ
ஒரு மூலையில்
சூரியன் மறைகின்றது
போலாகிவிடுமா!

அர்த்தப்படுத்த
உண்மையாக்க
சாட்சி ஒன்றுமேயில்லாத
இந்த அன்பு
அந்தரத்தில் பறக்கும்
பறவை
பயமாக அம்மா மனதிற்கும்
சந்தோஷமாக
என் மனதிற்கும்!

உன்கண்
இமைகளை விரித்து
என் பார்வையை
கூட்டினாய்!

உன்நெஞ்சில்
எனக்கு
அடித்தால் வலிக்கும்
என்னை
அணைத்தால் வலிக்கும்
நாளங்கள்
அறிந்திருக்குமா
என்
அம்மா என்று!

செல்வா

# நட்பின் நூற்றாண்டே!

வண்ணத்துப்பூச்சியின் இரட்டைச் சிறகுகளாய்ப் படபடத்துக்கொண்டிருந்த - ஆண், பெண் வாழ்க்கை, வற்றிய ஆற்றின் சுடுமணலில் பிளந்துகிடக்கும் வெண்கிளிஞ்சல் ஓடுகளால் ... இன்று!

உடல்களின் அதிர்வுகளில் இசை பிசகாமல் மிக இயல்பாய் வாழ்ந்த வாழ்க்கை தமிழ் வாழ்க்கை.

புறவேட்டையில் பகலும், அகவேட்டையில் இரவுமாய், வாழ்வைப் பிழிந்து பிழிந்து



பருகிய காலம் குறிஞ்சிக் காலம். ஆண், பெண்... பெண் ஆண் எனும் சம அளவில் பின்னப்பட்ட உயிர்ச்சங்கிலிகளாய், நீண்ட அவர்தம் வாழ்வே இயல்பு வாழ்வு.

செடிகள், கொடிகள், பறவைகள், மரங்கள், ஓடைகள், அருவிகள், கூழாங்கற்கள், மழை, குளிர், நெருப்பு, ஆடுகள், மாடுகள் என இயற்கையின் பிடி தளராமல் ஆணும் பெண்ணுமாய்ப் புல்லாங்குழலுக்குள் முறுக்கேறி நுழைந்து இசையாய் வெளியேறி

# வருக! வருக!

முல்லைக் காலத்தோடு முற்றுப்பெற்றது உயிரின் இயற்கை.

மருதத்தில் தொடங்கிற்று அடிமை வாழ்வு. அரசு... பேரரசு என்னும் மனித வேட்டை நாள்களின் போர்ப்புமுதிர்களூடே தொலைந்தது ஆண் - பெண் நிகர்நிலை.

ஆளுமைத்திமிர் பிடித்துக் கொழுப்பேற்றி, அடக்குதல்.. அகலப்படுத்துதல் எனும் வெறிப்பிடித்துக் கிளப்பிய ஆண்மை... இயற்கைகளை வேட்டையாடத் தொடங்கிய நேரத்தில் முற்றுப்பெற்றது பெண்மையின் சுயம். விலங்கு வேட்டையிலிருந்து மனித வேட்டைக்கு மாறிய மன்னர்களை... "மூளை வேட்டை" வெற்றி கண்ட சூழலில் தூய்மை இழந்தது நம் தொன்மம்.

பெண் கட்டளைக் களித்துறை என்றானது இங்குதான்.

பெண்ணின் மூளைப்படிவுகளில் குவிந்து கிடந்த கேள்விகள் யாவற்றையும் துளியும் மிச்சமின்றித் துடைத்துப் போட்டது மருதம்தான்.

நகரம் - கருத்துருவாக்க மையமாய் மாறத்தொடங்கிய சூழலில்... பெண் அந்தப் புறச் சுவர்களுள் முடங்கினாள்.

அதிலிருந்து எத்தனைக் காலமாயிற்று! பெண்... தனது சிந்தனைகளில் பேசி! தனக்காகத்தான் மூச்சிழுத்து! தண்ணீர்ச் சிறகு தட்டி நீச்சலிட வாய்த்ததோ அவளுக்கான நாட்கள்! ஆடைகளும், அணிகலன்களும் சுமக்கமுடியாமல் சுமந்து அசிங்கப்பட்டது அவளின் அம்மணம்.

காலம் புரள்கிறது.

பெண் - ஆண் எனக் கிழிந்து கிடக்கும் கவிதைத்தாளை ஒரேசேர ஒட்டி வைத்துப் பார்க்க... படிக்க... இயல்பு நிகழ்வு சம்மதிக்கின்றது.

காமம் கிளறி வணிகம் செய்யத் துணியும் உலகமயமாதலுக்கூடேயும் நட்பு... நம் தொன்மத்தின் மிச்சமாய் வளர்கிறது.

குறிப்பாக ஆண் - பெண் நட்பு.

உடல்களின் முரண் இணைவில் தாம் உயிர்த் தொடர்ச்சி.

ஆனாலும், காமமே... காதலே அல்ல வாழ்வின் தொடர்ச்சி.

வடிந்த ஆற்றின் நொய்மணலில் தோண்டிய ஊற்றுக் குழியில்... கலங்கல் தண்ணீரை இறைத்து முடித்த பின், ஊறும் தெளிந்த தண்ணீராய் நிறைந்து தளும்புகிறது நட்பு.

தளும்பும் நட்பில் வானம் ஊற்றிக் குடிக்கிற பக்குவம் தூண்டவே... இந்த நட்புக்காலம்! இயல்பாய்... மிக இயல்பாய்... திருவிழாவின் பேரிரைச்சலுக்கு நடுவே கேட்டு மகிழும் நாட்டுப் புறப்பாடலாய் வாய்த்திருக்கிறது இந்த நட்பு.

புன்செய்க் காடுகள் நெடுக நம் பாட்டன்மார்களும், பாட்டிமார்களும் வாழ்ந்த வாழ்க்கைதான் இது. புதிதொன்றுமில்லை.

அறிவுமதி

# பிந்தி... முந்தி...

அலுவலகத்திற்கு ஊழியர்கள் எல்லோரும் காலை ஒன்பது மணிக்கு முந்தியே வந்துவிடவேண்டும். ஆனால் பாமரனோ ஒவ்வொரு நாளும் பிந்தித்தான் அலுவலகத்திற்கு வருவான். இதை முதலாளி கண்டும் காணாதது போல் இருப்பார். அந்த அலுவலகத்தில் வேலை செய்கின்ற எல்லோரும் பாமரன் மீது ஒரு பார்வை...

முதலாளிக்குத் தெரிந்தவனாக இருப்பானோ... அல்லது உறவினராக இருப்பானோ... என்று எல்லோருக்கும் ஒரே குழப்பம். பாமரன் ஒருவன்தான் அந்த அலுவலகத்தில் இருந்து தூர இடத்தில் இருக்கின்றான். அதுதான் பிந்தி வேலைக்கு வருவான். அது யாருக்கும் தெரியாது. ஊழியர்கள் எல்லோரும் வேலை முடிந்து சென்று விடுவார்கள். பாமரன் ஒரு மணி நேரம் கழித்துத்தான் அலுவலகத்தினை விட்டு பிந்திச் செல்வான். அதனால்தான் பாமரனை முதலாளி ஏசுவதில்லை.

பாமரனைப் பார்த்து பரந்தாபனும் பிந்தி வேலைக்கு வருவான் ஆனால், முந்திச் சென்றுவிடுவான். ஒரு நாள் பரந்தாபன் பிந்தி வேலைக்குவந்து முந்தி சென்றதை முதலாளி பார்த்துவிட்டார்... உடனே முதலாளி பரந்தாபனைப் பார்த்து ஏசுவதற்கு வாய் திறக்க.. பரந்தாபன் முந்திக்கொண்டு - முதலாளியைப் பார்த்துக் கேட்டான்... பாமரன் மட்டும் பிந்தி வரமுடியுமா...? எனக் கேட்க, உடனே முதலாளி சொன்னார் - பாமரன் தூர இடத்தில் இருந்து வருவதால் வேலைக்குப் பிந்தி வருகின்றான். அதனால்தான் நான் அவனை பிந்திப்போகச் சொன்னேன் என்றார்.

ஏட்டிக்குப் போட்டியாக பரந்தாபனும், அப்ப நானும் பிந்தி வந்து பிந்திப் போகின்றேன் என்றான். எல்லோரின் முன்னும் முதலாளியுடன் மரியாதை இல்லாமல் வாதாடினான். கோபம் கொண்ட முதலாளி இனிமேல் உனக்கு இங்கே வேலை இல்லை என்று துரத்திவிட்டார்.

அன்றைய நாள பரந்தாபன் வீட்டுக்குப் பிந்திப் போனான். அங்கே பரந்தாபனின் அம்மா கேட்டா. ஏன்டா பிந்தி வாராய்? என்று. பரந்தாபன் சொன்னான் - முதலாளியும் இதைத்தான் கேட்டார், நீங்களும் கேட்கிறியள் என்றதும் அம்மா ஒன்றுமே விளங்காமல் முழிக்க... பாமரன் வந்து நடந்ததைச் சொன்னான். முந்தியே சொன்னனான் இவனுக்கு இந்த வேலை சரிவராது.. எந்தக் காரியம் என்றாலும் பிந்தித்தான் செய்வான். இனியாவது முந்திச் செய்யப் பழகு என்று சொல்லி முடித்து, முந்தியெல்லாம் பிந்தித்தான் என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டு போனார் பரந்தாபனின் அம்மா.

செல்வம்

## சர்வதேச அரசியல்...

- கே.ரீ.கணேசலிங்கம் -

# ஆளும் சக்திகளின் அடிவருடிகளாகும் ஊடகங்களின் செயற்பாடுகள்.....!




ஈராக் விவகாரம் அமெரிக்கரையும், பிரித்தானியரையும் விடுவதாக இல்லை. போர் முடிந்து சதாம் ஹுசைன் கைதுசெய்யப்பட்ட பின்பும், ஈராக்கின் போருக்கான அரசியல் - இருநாடுகளையும் விரட்டிக் கொண்டே இருக்கின்றது. பிரித்தானியப் பிரதமர் ரொனி பிளேயர் இரண்டாவது தடவையும் ஆட்சியிலிருந்து வருகின்றார். அதனால், அவருக்குத் தனிப்பட்டரீதியில் ஏற்படும் நெருக்கடி, அவரைப் பெரியளவில் பாதிக்காதுள்ளது என்பதும், அமெரிக்க ஜனாதிபதி புஷ் இரண்டாவது தடவை போட்டியிடவுள்ளதால், எப்போதும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இரண்டு நாட்டு தலைமைகளும் தமது நாடுகளதும், மக்களதும் அரசியல் நாகரிகத்தை அவமதித்ததுடன், தலைமுறை மாற்றத்தின் விளைவுகளை வெளிப்படுத்திவிட்டனர். இவ்வாறம் ஊடகத்துறைகளின் சமகாலப்போக்கை அளவீடுசெய்ய இக்கட்டுரை முயற்சிக்கின்றது.

பிரிட்டிஷ் விஞ்ஞானி டேவிட் கெலியின் விவகாரம் - பிரதமர் ரொனி பிளேயரையும், அவரது அரசாங்கத்தையும் உலுக்கியதுடன், பி.பி.ஸியையும் குழப்பத்துக்குள்ளாக்கியது. பி.பி.ஸியின் தலைவர் கேவின் டேவிஸ் திடீர் ராஜினாமாவுக்கும், அதன் செய்திகள் மீதான நம்பிக்கையீனத்தையும் ஒன்றாக ஏற்படுத்தியது. பேரழிவு ஆயுதங்கள் ஈராக்கில் இல்லாதநிலையில் - போரைத் தொடக்குவதற்காகப் பிரதமரும், அவரது ஆதரவாளர்களும் புலனாய்வுத் தகவல்களைத் திரித்துக்கூறி, ஈராக் மீதான போரைத் தொடக்கியதாக பி.பி.ஸி. குற்றஞ்சாட்டுவதற்கு பின்னணியில் விஞ்ஞானி டேவிட் கெலி இருந்தாரென சந்தேகங்கள் எழுந்தன. அதனை பி.பி.ஸி. இரகசியமாகவோ, பகிரங்கமாகவோ உலகத்துக்கு வெளிப்படுத்தவேண்டிய நிலை ஏற்பட்டது. இதன்பின்னர் பிரித்தானிய அதிகாரிகள் கெலியை விசாரணைக்குட்படுத்தி, அதன் பின்னர் மர்மமானமுறையில் கெலி பயிற்சியில் ஈடுபட்டபோது இறந்து கிடந்ததாகத் தகவல் வெளியானது. அதற்கான குற்றச்சாட்டையும் பிளயர்மீது பி.பி.ஸி. சேவையே சுமத்தியது. அதன்பின்பு கெலியின் மரணத்தை விசாரிக்குமாறு நீதிபதி ஹட்டன் பிரபு - பிரதமரால் நியமிக்கப்பட்டார். அவரது 700 பக்க அறிக்கையில்- பிரதமர் பழிக்குரியவர் அல்லர் என்றும், பி.பி.ஸியின் செய்திகள் தவறானவை என்றும் கண்டித்து வெளியிட்ட செய்தி பரபரப்பை ஏற்படுத்தியது.

இனி விட்யத்திற்கு வருவோம். இந்த விடயத்தில் மூன்று பிரதான துறைகள் சம்பந்தப்பட்டுள்ளன. குறிப்பாகப் பிரித்தானிய சட்டத்துறை, நீதித்துறை மற்றும் பிரித்தானியாவுக்குரியதும், உலகத்துக்குரியதுமான ஊடகத்துறை என்பனவாகும். இதில் ஊடகத்துறை சுதந்திரம், உரிமை, ஜனநாயகம் போன்ற கருத்தியல் தளங்களுடன் நெருக்கமான தொடர்புடையது. சட்டத்துறையும், நீதித்துறையும் பரஸ்பரம் ஒன்றையொன்று ஆதரிப்பதும், ஒன்றில் மற்றொன்று தங்கியிருப்பதும் இயல்பான விடயமாகிவிட்டது. எனவே, நீதிபதியின் அறிக்கையோ அல்லது அதில் குறிப்பிடப்பட்ட அம்சங்களோ ஆச்சரியம் தரக்கூடியவையல்ல. ரொனி பிளேயர்-ஹட்டன் பிரபுவை நியமனம் செய்யும்போதே, பி.பி.ஸி. இந்த முடிவை எதிர்பார்த்திருக்கவேண்டும். ஏனெனில், நீதிபதியிடம் நீதி இருப்பதைவிட, பிரித்தானிய நீதித்துறையிடம் நீதி இருக்கிறதா? என்பதே பிரதான கேள்வியாகும். அது சாத்தியப்படாதபோது, ஊடகத்துறை எப்படி நீதியை எதிர்பார்க்கமுடியும்.



உலகத்தில் பி.பி.ஸி, ரொய்ட்டர் ஆகிய சேவைகள் பிரபலமானவையாக உள்ளன. இவை இரண்டும் முழு உலகத்துக்கும் போர், சமாதானம் சார்ந்தநிலையில் மட்டுமல்லாமல், அரசியல், பொருளாதார, கலாசார, சமூக விழுமியங்கள் சார்ந்த செய்திகளைப் பரப்பிவருகின்றன. இன்று பிரபலமாகப் பேசப்படும் - பல நூற்றாண்டுகளுக்கு முன்பே அறிமுகமாகிய உலகமயப்படுத்தலுக்கு, இந்த இரு ஊடகங்களும் கணிசமான செல்வாக்கைச் செலுத்தி வருகின்றன. தகவல் புரட்சியின் பிரதிபலிப்புக்கூடாக வளர்ந்துவரும் ஊடகத்துறையில் செய்தி ஊடகங்கள் மிகமுக்கியமானவையாக விளங்குவதற்கு, உலகமயப்படுத்தலை ஊக்குவிக்கும் அரசுகளும் காரணமாகவுள்ளன. குறிப்பாக, ஈராக் தொடர்பான செய்திகளின் உண்மைத்தன்மைகளை மறைத்தது மட்டுமன்றி, அவற்றைக் கண்டறிய முடியாத தடைகளையும் அமெரிக்கா, பிரித்தானியா போன்ற அரசுகள் மேற்கொண்டுவந்தன. ஈராக்கின் உண்மை அம்பலத்துக்கு வந்துவிடக்கூடாது என்பதற்காகவே இஸ்லாமிய செய்தி ஊடகமான அல் ஜசீரா மீது பெரும் அழுத்தங்களையும், அச்சுறுத்தல்களையும் மேற்கொண்டு வெற்றிகண்டது. ஆரம்பகாலத்தில் சதாம் ஹுசைனுக்கு சார்பாகவோ, எதிராகவோ அன்றி, உண்மைத் தகவல்களை அந்தத் தொலைக்காட்சி சேவை அம்பலத்துக்குக் கொண்டுவந்தது. ஆனால், போர் தீவிரமடைய அமெரிக்க இராணுவ இயந்திரத்தின் பாதிப்புக்களையும், அழிவுகளையும் அல் ஜசீரா அம்பலப்படுத்த முயன்றபோதே - அமெரிக்க அரசே நேரடியாகச் செயற்பட்டு, அல் ஜசீராவைக் கட்டுப்படுத்தியது. இதனால், போரைப் பற்றி உண்மைத்தகவல்களை இன்னுமே உலகம் அறியாத புதிராக உள்ளது. ஏன், சதாம் கைது விவகாரம் கூட இன்னுமே நிறைய மர்மங்களைக் கொண்டதாக இருக்கின்றது. இதில் ரொய்ட்டரைவிட பி.பி.ஸி. சற்று ஒரு சதவீதமளவில் புரட்சிகரமான போக்கைப் பின்பற்றியது. அதனால்தான், கெலியின் தகவலை முதலிலேயே அம்பலப்படுத்தத் தயாரானது. அதனையும் பிரிட்டிஷ் நீதித்துறையும், பிரதமரும் சேர்ந்து முடிவுக்குக் கொண்டுவந்தனர். இனி இப்படியான தகவல்கள் வெளிவருமா இல்லையா என்பதைவிட, பி.பி.ஸி. ஆட்சிக்கு வரும் அரசியல் தலைமைகளின் நலன்கள் எப்படி அமைந்திருக்கிறதோ, அப்படியே தனது போக்கை மாற்றிக்கொள்ள வேண்டியுள்ளதாக அமையுமோ என எண்ண வேண்டியுள்ளது.



உலகமயப்படுத்தலை தீவிரமாகப் பரப்பி வருவனவற்றில் செய்தி ஊடகங்கள் முன்னணியில் உள்ளன. போலியான, உண்மைத் தன்மையற்ற விடயங்களை யதார்த்தமானதாக்கி, நிதர்சனமான உண்மைகளாக இவை மாறிவருகின்றன. இலகுவாக அமுல்படுத்தலை சாத்தியப்படுத்தக்கூடியவையாக ஊடகங்கள் மாறிவிட்டன.

இலங்கை போன்ற பின்தங்கிய நாடுகளிலுள்ள ஊடகங்களின் நிலை மிகமோசமாகவே உள்ளது. தனியாமயப்படுத்தலை இலக்காகக் கொண்டு இயங்கும் ஆதிக்க சக்திகளின் தகவல்களையும், செய்திகளையும் பரிமாற்றும் ஊடகங்களாகவே பின்தங்கிய நாடுகளின் ஊடகங்கள் காணப்படுகின்றன. வேகமாகவும், விரைவாகவும் உலகத்தில் வெளியாகும் செய்திகளை மக்களுக்கு கொடுப்பதே தற்போதைய ஊடகங்களின் பணியாகவுள்ளது. எவ்வளவுக்கெவ்வளவு, உடனுக்குடன் செய்திகளைக் கொடுப்பதில் போட்டி நிலவுகின்றதே தவிர, செய்தியின் உண்மைத்தன்மை, தேவை என்ற அடிப்படை எந்தவொரு ஊடகத்திடமும் கிடையாது. மேலும் ரொய்ட்டர், பி.பி.ஸி. வெளியிடும் செய்திகளை மொழிபெயர்த்து தமது பிரதேச மொழிக்கு மாற்றுவதே ஊடகங்களின் பிரதான நோக்கமாக உள்ளது. இது உலகமயமாக்கத்தை மேலும் இலகுபடுத்தும். மாயைகளையும், போலிகளையும் இனங்காட்டமுடியாத ஊடகங்களே உலகத்தில் மலிந்துள்ளதுடன், செல்வாக்குடையவையாக உள்ளன. இதில் பிராந்திய ஊடகம், சுயாதீன ஊடகம் என்றெல்லாம் தங்கள் அமைப்புக்களை வடிவமைத்துக்கொள்கிறார்களே தவிர, அவற்றின் தகவல்கள் அனைத்தும் ஒரு சில ஊடகத்திலிருந்து அல்லது நாடுகளிலிருந்து பிறப்பதாகவே உள்ளது.

**மாயைகளையும், போலிகளையும் இனங்காட்டமுடியாத ஊடகங்களே உலகத்தில் மலிந்துள்ளதுடன், செல்வாக்குடையவையாக உள்ளன. இதில் பிராந்திய ஊடகம், சுயாதீன ஊடகம் என்றெல்லாம் தங்கள் அமைப்புக்களை வடிவமைத்துக்கொள்கிறார்களே தவிர, அவற்றின் தகவல்கள் அனைத்தும் ஒரு சில ஊடகத்திலிருந்து அல்லது நாடுகளிலிருந்து பிறப்பதாகவே உள்ளது.**

எனவே, டேவிட் கெலியின் விவகாரத்தில் சிக்கியுள்ள பி.பி.ஸி. எந்த அடிப்படையிலும் தனித்துவமான அமைப்பு அல்ல. ஆதிக்க சக்திகளின் கொள்கைகளை பிரசாரப்படுத்துவதே அவைகளின் நோக்கமாகும். அதிலிருந்து தவறுவது, விலகுவதென்பதற்கு ஏற்பட்ட அழுத்தங்களே தற்போதைய நெருக்கடி எனக் கூறிக்கொள்ளலாம். ☆

## புனித 'ஹஜ்' திருநாளையொட்டி...

எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி

# சகோதரத்துவத்தையும் மனிதநேயத்தையும் வலியுறுத்தி நிற்கும் 'ஹஜ்' திருநாள்

இஸ்லாம் மதம் வகுத்த ஐந்து பிரதான கடமைகளில் ஹஜ்ஜும் ஒன்றாகும். உலகின் சகல பகுதிகளிலும் வாழ்ந்து கொண்டிருக்கும் முஸ்லிம்கள், தமக்கிடையேயான சகல வேறுபாடுகளையும் மறந்து புனித மக்கா மாநகரில் ஹஜ் கடமைக்காக இன்று ஒன்றுகூடுகிறார்கள். சுயநலப்போக்கை மறந்து சகோதரத்துவத்துடனும், மனிதநேயத்துடனும் உலக ஒற்றுமைக்காக அவர்கள் மேற்கொள்ளும் இந்தப் பயணம் - மதம் மீதான அவர்களின் விசுவாசத்தையும் ஒழுக்கப் பண்பையும் காட்டுகிறது.

இந்தப் புனித நாளில் நபி முஹம்மது (ஸல்) அவர்கள் அரபாத் பெருவெளியில் சுமார் ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் ஸஹாபாக்கள் மத்தியில் நிகழ்த்திய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த உரையின் முக்கிய பகுதிகளை இங்கே நோக்குவோம்.

மனிதர்களே!

பெண்களுடன் உறவாடுவது பற்றி அல்லாஹ்க்கு அஞ்சிக்கொள்ளுங்கள். உங்கள் மனைவியர் மீது உங்களுக்குச் சில உரிமைகள் உண்டு. அவ்வாறே அவர்களுக்கும் உங்கள் மீது சில உரிமைகள் இருக்கின்றன. கற்பைப் பேணி, பணிவுடன் நடந்துகொள்வது அவர்கள் கடமை. அவர்கள் உங்களிடத்தில் அல்லாஹ்ஜின் பொறுப்பாக இருக்கிறார்கள். நீங்கள் எதை உண்ணுகிறீர்களோ அதையே அவர்களுக்கும் உண்ணக் கொடுங்கள் நீங்கள் உடுத்துவதைப் போன்றே அவர்களும் உடுத்தச் செய்யுங்கள்.


இந்தப் பூமியில் தன்னுடைய அதிகாரத்தை மீண்டும் நிலைநிறுத்தும் எண்ணத்தை சைத்தான் இன்று இழந்துவிட்டான். என்றாலும் அற்ப விஷயங்களில்கூட நீங்கள் அவனைப் பின்பற்றினால் அது அவனுக்கு மகிழ்ச்சியளிக்கும். எனவே உங்கள் விசுவாசத்திலே அவனைப் பற்றி எச்சரிக்கையாக இருங்கள்.

மனிதர்களே என்னுடைய உபதேசங்களை நன்றாகக் கேளுங்கள். நான் எனக்கு அறிவிக்கப்பட்ட செய்தியை உங்களுக்கு எடுத்துரைத்துவிட்டேன். உங்களிடையே அல்லாஹ்ஜுடைய வேதத்தையும், மார்க்கக் கடமைகளில் எனது வழிமுறைகளையும் விட்டுச்செல்கிறேன்.

அவற்றைக் கடைப்பிடிக்கும் வரையில் நீங்கள் வழிதவறமாட்டீர்கள்.

நான் கூறுவதை உள்ளத்தில் பதிந்து கொள்ளுங்கள். எல்லோரும் ஒரே சமத்துவ, சகோதரத்துவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை நன்கறிந்து கொள்ளுங்கள்.

ஒருவர் மனமார அளிப்பதைத் தவிர, வேறெந்த முறையிலும் பிறருடைய பொருளை அடைவது தடுககப்பட்டுள்ளது. ஒருவர் மற்றொருவருடைய உரிமைகளைப் பறிக்க வேண்டாம்.



உங்கள் அனைவருக்கும், இறுதி நாள் வரை மேலும் மேலும் இஸ்லாத்தில் சேர்ந்து கொண்டிருப்போருக்கும் அல்லாஹ்ஜின் அருள் மாரி பொழிவதாகுக!

## ஒரு நிமிடம் சிந்திப்போம்

கலை - இலக்கியங்களை படைக்க மனிதன் சுதந்திரம் பெற்றவன். இந்த சுதந்திரத்தை மற்றவர்களின் வளர்ச்சியை பாதிக்காத வகையில் கையாள்வது, சமூக பொறுப்புணர்ந்தவர்களின் கடமை.

ஆரோக்கியமான படைப்புக்கள் இன்று அர்த்தமிழந்து போகின்றன. ஏனெனில், சுவைஞர்கள் தொகையும் குறைந்து, அதன் பெறுமதி விளங்கிக்கொள்ளமுடியாத ஒன்றாக இன்றைய சமூகம் இருக்கின்றது.

படைப்பாளரும் - பொருளாதாரத்தை முதன்மைப்படுத்தி கொள்வதினால், புதிது புனைதல் என்ற நோக்கில் அதீத கற்பனையில், சுவைஞரை மிதக்க வைத்து, யதார்த்தத்திற்கு அப்பாற்பட்ட ஒரு உலகிற்கு அழைத்து செல்கின்றனர். இதனால் யதார்த்தத்தினை குழிதோண்டிப் புதைக்கின்ற துர்ப்பாக்கியநிலை இன்றைய படைப்புலகில் பெருகியிருக்கின்றது.

கலைப் படைப்புக்களுக்கு கற்பனை தேவை. ஆனால், யதார்த்த நிலை தவறிய, முற்றும் நீக்கிய போக்கு தவறானது.

சமூகப்புலத்தில் நடப்பவற்றை எடுத்துச்சொல்லி, அதன் தவறுகளைச் சுட்டிக்காட்டி, அதற்கான தீர்வினைக் கண்டுபிடிக்க வைப்பதும் இன்றைய காலத்தின் தேவை. இதனை கலைப்படைப்புக்களின் ஊடாக, அதாவது ஆற்றுகை சார்ந்த வகையிலோ, ஊடகங்கள் சார்ந்த வகையிலோ, இலக்கியம் சார்ந்த வகையிலோ கொடுக்கவேண்டும்.

சமூகத்தைச் சிதைப்பதும், உருக்கொடுப்பதும் படைப்பாளனின் கையிலுள்ளது. நல்ல படைப்புக்கள் மனிதனை நல்வழிக்கு நடத்திச்செல்லும். தீய படைப்புக்கள் மனிதனை தீய வழிக்கு நடத்திச்செல்லும். இதனால் ஒவ்வொரு படைப்பாளனும் சமூக தரிசனத்தை உணர்ந்து ஆக்கபூர்வமான இலக்கியம் படைக்கவேண்டும்.

இன்று சில படைப்பாளிகள் வெறுமனே தமது பெயர் பேசப்படுவதற்காகத் தரமற்றவற்றையும் எழுதி, மக்கள் மத்தியில் பிரபல்யம் பெறும் போக்குக் காணப்படுகின்றது.

வன்முறையைத் தூண்டும், இனத்துவேசத்தைத் தூண்டும் கலைப்படைப்புக்களும் தவறானவையே. ஆனால் உரிமைக்காக அது சிதைக்கப்படும்போது, அது குறித்து உரத்து குரல்கொடுப்பதற்காக எழும் படைப்புக்கள் இத்தகைய வகைக்குள் அடங்காது.

எந்தவொரு படைப்பாளனும் இலக்கிய திருட்டில் ஈடுபடக்கூடாது. ஏனெனில் ஒரு படைப்பை ஒருவர் உருவாக்கும்போது, நேரத்தை செலவுசெய்து வாழ்வியல் மற்றும் சூழல் யதார்த்தத்தினை அவதானித்து, ஆழ்ந்த சிந்தனையுடனேயே உருக்கொடுக்கின்றனர். இதை எடுத்து மற்றொருவர் கையாளும்போது அவரைக் குறிப்பிடவேண்டும். இச்செயல் அவரை - அவரது படைப்பை மதிக்கின்ற செயலாக இருக்கும்.

படைப்பாளர்களிடம் இருந்து கருத்து மற்றும் கொள்கை வித்தியாசங்கள் கட்டாயம் இருக்கும், இருக்கவேண்டும். இதை மாற்றமுடியாது. ஆனால், கொள்கை மாறுபட்டாலும் - மனிதத்தை நேசிக்கும், மதிக்கும் பண்பு இருக்கும்போதே அவர் உயர்ந்த உன்னத படைப்பாளனாக முடியும். இத்தன்மை இல்லாதவன் படைப்பாளன் - கலைஞர் என்ற தன்மையில் இருந்து மதிப்பிழந்து போகின்றார்.

ஆகவே, ஒவ்வொரு படைப்பாளரும் தமக்குரிய சமூகப் பொறுப்பை உணர்ந்து, ஏனைய படைப்பாளரை மதித்து வாழும் போதே, சமூக மாற்றத்தில் ஆரோக்கியத்தைக் காணலாம்! சிந்தித்துச் செயற்படுவோம்.

யாழ். ராதவல்லி ☆

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*சிறப்புஈனும் செல்வம்பெறினும் பிறர்க்கு இன்னா*
*செய்யாமை மாசுஅற்றார் கோள்.*

திருக்குறள்.

## நமது நோக்கு

# இம்சைதரும் இசை இரைச்சல் கலாசாரம்

அண்மையில் மேல்நாடொன்றில் நடைபெற்ற வழக்கொன்றின் விசாரணை முடிவில் குற்றவாளியாகக் காணப்பட்ட நபர் ஒருவருக்கு, தண்டனையாகப் பாதிக்கப்பட்ட நபருக்கு 25 ஆயிரம் டொலர்கள் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டதாகச் செய்தியொன்றின்மூலம் அறியக்கூடியதாக இருந்தது.

வழக்காளியானவர் தனது பிரார்த்தனை வேளையின் போதும், பகல்நேர குறுந்தூக்கவேளையிலும் அவரது அயல் வீட்டுக்காரர், அதுவும் அவரது நண்பர் தனது வானொலிப் பெட்டியில் உச்ச ஒலியில் பாடல்களைக் போட்டு இடையூறு செய்வதன் காரணமாகத் தனது மன அமைதி சீர்குலைந்து, இரத்த அழுத்தம் அதிகமாகிக் குடும்பத்தினருடன் அடிக்கடி மனவேறுபாடு எழக் காரணமாகிவிட்டார் என்றே எதிராளிமீது குற்றம் சுமத்தியிருந்தார்.

நீதிபதி குற்றச்சாட்டின் நியாயத்தை புரிந்துகொண்டே அத்தண்டனையை எதிராளிக்கு விதித்தார்.

தன் வீட்டிற்குள் வைத்தே, தான் வானொலியைக் கேட்பதாகவும், அது தனது சுதந்திரம் என எதிராளி வாதாடிய போதும், இந்த வழக்குத் தனது மனித உரிமையை நிராகரிக்க முயல்கிறது என எதிர்க்குற்றம் சுமத்தியபோதும், நீதிபதி அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

அடுத்த வீட்டுக்காரனின் சுதந்திரத்தை, அமைதியை, அவரது உரிமைக்குள் தலையிடாத வகையில்தான் உனது சுதந்திர வெளிப்பாட்டு உரிமை இருக்கவேண்டும் என்பதே நீதிபதியின் தீர்ப்பு கூறிய நீதியாகும்.

இந்த நீதி வேறு, பல்வேறு பிரச்சினைகளுக்கும் பொதுவானதாக இருந்தாலும், நாம் இப்போது இந்தப் பிரச்சினைக்குரிய தீர்ப்பு என்ற அடிப்படையில்தான் நோக்கப்போகிறோம்.

இன்று யாழ்.குடாநாடு இரைச்சல் நிறைந்த இடமாகிவிட்டது. மற்றவர்கள் எப்படியோ, தமிழ் மக்கள் இப்போது இந்த இரைச்சல் கலாசாரத்திற்குப் பெருமளவில் அடிமையாகிவிட்டார்கள் அல்லது அந்தக் கலாசாரம் அவர்களை முழுமையாக ஆக்கிரமித்துவிட்டது என்றே கூறவேண்டும்.

விழாக்களைக் கொண்டாடுதல் மனித இயல்புதான். அதனை எவரும் நிராகரிக்கவில்லை. ஆனால், அதனை இசை அல்லது பாடல்கள் என்ற பெயரில் சகிக்கமுடியாத ரசனையைக் கொல்லும் வகையிலான ஓசைகளைக் கட்டுப்பாடற்றுக் கர்ணகடூரமாக அதிக சக்திமிகு ஒலிபரப்பு சாதனைங்களின் உதவியுடன், நேரகாலம் பாராது ஒலிக்கவைப்பதன் மூலம் -காற்றலையின் அதிர்வை அதிகப்படுத்தி, இரைச்சலை இன்னிசையாக நினைத்து இரசிக்கமுயல்வதானது- ஒருவித மனநோயின் வெளிப்பாடாகவே இருக்கும்.

குடாநாட்டில் தற்போது நடைபெறும் திருமணம், பிறந்த நாள், புதுமனை புகுவிழா என எந்தக் கொண்டாட்டமானாலும் அதனை அயல் பூராகவும் பகிரங்கப்படுத்த ஒலிபரப்புச் சாதனங்களையே பயன்படுதப்படுகின்றன.

வீடுகளின் வெளிவாசலுக்கே கொண்டுவரப்படும் இந்த இரைச்சலைப் பரப்பும் சாதனங்கள், நேரகாலமின்றி பகல்பூராவும், இரவிலுமாகவும் உச்சஸ்தாயியில் இசைக்கும் பாடல்களால் ஏற்படும் தாக்கங்கள் எவ்வளவு பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்பது பலரும் உணராத - உணரநினைக்காத ஒன்றாகவே உள்ளது.

அயலிலுள்ள மாணவர்களின் கல்வி, நோயாளர்கள் மற்றும் முதியோர்களின் தூக்கம், மற்றும் ஓய்வு, சராசரி அமைதி தேடும் மனிதரின் நிம்மதியான வாழ்க்கை என அனைத்துமே இந்த விழாக்கொண்டாடுவோரின் இசை இரைச்சல் இரசனையால் பாதிக்கப்படுகின்றது.

இந்த வகையில் வணக்கஸ்தலங்களும் இந்தத் தவறை செய்தலல் முன்நிற்பவையாகவே உள்ளன. ஒரு அயலில் உள்ள பல்வேறு கோவில்களில் உயரப்பூட்டிய ஒலிபெருக்கிகள் அதிகாலையிலும், திருவிழாக்காலங்களிலும் உயர்ந்த இரைச்சல்தரும் பக்திப்பாடல்களை ஒலிபரப்புவதும் அர்த்தமற்றதும், அனர்த்தத்தையே ஏற்படுத்துவதுமேயாகும்.

ஆனமீக உணர்வு இசையால் ஏற்படலாம். ஆனால், இரைச்லால் ஏற்படாது என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் உணர்வது நல்லது.

ஒரேநேரத்தில் பல ஆலயங்களிலிருந்து இசைத்து இரைச்சலை ஏற்படுத்தும் பாடல்களில் ஒன்றைக்கூட ஒழுங்காகக் கேட்கமுடியாத அவலமே ஏற்படுகிறது.

பக்தி அமைதியானதாக, ஆன்மாவை வலுப்படுத்துவதாக இருந்தால் மட்டுமே அது சக்தி தரும் ஒன்றாக இருக்கமுடியும்.


அடுத்து விளம்பரம் மற்றும், பல்வேறு நுகர்வுப் பொருட்களின் விற்பனை வாகனங்களில் பொருத்தப்பட்ட ஒலிபெருக்கிகள் எழுப்பும் பாட்டு என்ற பெயரிலான அலறல்களால் அவை நகர்ந்து செல்லும் வீதிகளில், ஏனைய வாகனங்களில் சமிக்ஞை ஒலிகள் அமிழ்ந்துபோவதால், ஏற்படும் விபத்துக்கள் உட்பட பல்வேறு பாதிப்புக்களை பட்டறிந்தவரே உணர்வர்.

இப்படி இம்மாதிரியான - மக்களை பல்வேறு வகைகளிலும் பாதிக்கும் இத்தகைய நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்குவோர் -மனித உரிமைகளைப் பாதிக்கும் இவற்றின் தாக்கங்களை உணர்ந்துகொண்டது கிடையாதா?

அல்லது ஆரென்றாலும் எதையென்றாலும் கத்திவிட்டு போகட்டும் எமக்கென்ன என்று பேசாமல் இருக்கின்றார்களா?

ஒரு குறிப்பிட்ட 'டெசிபல' அளவுக்கு மேல் அதிர்வை ஏற்படுத்தும் எந்த இசையும் செவிப்பறையில் தாக்கத்தை ஏற்படுத்தி பல்வேறு வகையிலான உடல் மற்றும் உளவியல் பாதிப்புக்களை மனிதர்களுக்கு உண்டு பண்ணும் என்பதை இரைச்சலை வழங்குவோரும், இதற்கு அனுமதி வழங்குவோரும் புரிந்துகொண்டு, அறிவியல்ரீதியில் செயற்படவேண்டும் என்பது அவசியமாகும்.

## நாடும் நடப்பும்




# சுகாதார அமைச்சு அதிகாரிகளிடமிருந்து சாதகமான பதில் கிடைத்திருக்கிறதாம்!

## தொழிற்சங்க கூட்டமைப்பு அமைப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

சுகாதார சேவையில் நிலவும் சம்பளமுரண்பாட்டைத் தீர்க்க, சுகாதார அமைச்சின் அதிகாரிகளிடம் இருந்து சாதகமான பதில் கிடைத்திருப்பதாக, சுகாதார சேவை தொழிற்சங்க கூட்டமைப்பின் இணை அமைப்பாளர் ரவி கும்தேஸ் தெரிவித்தார்.

சம்பள முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு இம்மாதம் 60 வீதமும் எஞ்சியவற்றை செப்டம்பர் மாதமும் வழங்க இணங்கியுள்ளனர். புதிய இணக்கத்திற்கமைய சுற்றுநிருபம் கிடைக்கும் வரை உண்ணாவிரதப் போராட்டம் தொடரும்.

சுகாதார அமைச்சுக்கு முன்னால் நடைபெறும் தொடர்ச்சியான போராட்டத்திற்கு மேலதிகமாக தொடர்ச்சியாக வேலை பகிஷ்கரிப்பிலும் ஈடுபட கடந்த வெள்ளிக்கிழமை கூட்டமைப்பு தீர்மானித்தது. எவ்வாறாயினும் உத்தியோகபூர்வ சுற்றுநிருபம் ஒன்று அனுப்பத் தாமதித்து வருவதினால், வேலை பகிஷ்கரிப்பில் தொடர்ந்து ஈடுபடுவது தொடர்பாக ஆராயவேண்டிய தேவை எமக்கு ஏற்பட்டுள்ளது. எனினும், நாம் உண்ணாவிரதப் போராட்டத்தினை சுற்றுநிருபம் கிடைக்கும்வரை கைவிடாது இருக்கத் தீர்மானித்துள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பாலியல் துன்புறுத்தலுக்குள்ளாக்கப்பட்ட

# பதினாறு வயதுச் சிறுமியை நாடுகடத்த நியூஸிலாந்து அரசாங்கம் உத்தரவு!

இலங்கையில் பாலியல் துன்புறுத்தலுக்குள்ளாக்கப்பட்ட பதினாறு வயதான சிறுமி நியூசிலாந்து நாட்டில் தஞ்சம் கோரியபோது, அதனை அந்த நாட்டு அரசாங்கம் மறுத்ததுடன், அவரை இலங்கைக்குத் திருப்பியனுப்புமாறும் உத்தரவிட்டுள்ளது.

நியூசிலாந்து நாட்டின் குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தால் இந்த அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் குறித்த சிறுமியும் அவரது பேர்த்தியாரும் நியூசிலாந்து நாட்டின் ஒக்லண்ட் உயர்நீதிமன்றத்தில் மேற்கொண்ட மனுவும் நிராகரிக்கப்பட்டுள்ளது.

ஆனால், மருத்துவ பரிசோதனைகள் முடிந்து குறித்த சிறுமி உளரீதியாக நல்ல நிலைக்கு வரும்வரையும் இவர் சொந்த நாட்டிற்குத் திருப்பியனுப்பப்படமாட்டார் என நியூசிலாந்து நாட்டின் அரச சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

கடந்த இரண்டு வருடங்களாக நியூலாந்து நாட்டிலிருக்கும் இந்தச் சிறுமி, தற்போதுதான் இந்த பாலியல் துன்புறுத்தல் தொடர்பாகத் தெரிவித்துள்ளார். தான் தனது சொந்தநாட்டில் ஏழு வயதிலிருந்து பாலியல் துன்புறுத்தலுக்குள்ளாக்கப்பட்டதாகவும் கூறியுள்ளார். இதேவேளை - இந்தச் சிறுமியின் பெயர் விவரங்களை வெளியிட அதிகாரிகள் மறுத்துவிட்டனர்.

# உலகவங்கியின் தென்னாசியப் பிராந்திய பொருளியலாளர் கொழும்புக்கு விஜயம்

உலக வங்கியின் தென்னாசியப் பிராந்தியத்துக்கான சிரேஷ்ட பொருளியலாளரான எஸ்.தேவராஜன் இன்று இலங்கைக்கு விஜயம செய்யவுள்ளார் என உலக வங்கி அறிவித்துள்ளது.

2004 ஆம் ஆண்டுக்கான உலக அபிவிருத்தி அறிக்கை தயாரிப்பில் பணிப்பாளராகக் கடமையாற்றிய இவர், உலக வங்கியில் வேறு பல உயர்பதவிகளையும் வகித்து வந்ததுடன், இவ்வாண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதலே இவர் தென்னாசியப் பிராந்தியத்துக்கான சிரேஷ்ட பொருளியலாளராக நியமிக்கப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

கொழும்பில் இரண்டு நாள் தங்கிநிற்கவுள்ள இவர், உலகப் பொருளாதார அபிவிருத்தி தொடர்பான இரண்டு கருத்தரங்குகளை நடாத்தவுள்ளதுடன், இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைமை தொடர்பாகவும் ஆராயவுள்ளதாக உலகவங்கி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# மக்கள் பொருளாதார பெறுமானத்தில் அதிக கவனம் செலுத்தவேண்டும்

## ஜப்பான் உயரதிகாரி தெரிவிப்பு

சமாதான முயற்சிகளின் அரசியல் பெறுமானத்தில் முழுக் கவனத்தையும் குவிப்பதற்குப் பதிலாக, அதன் பொருளாதார பெறுமானத்திலேயே மக்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

இவ்வாறு கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றும்போது, ஜப்பானிய வெளிவிவகார அமைச்சின் பொருளாதார அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் மொட்டோஹிடே யொசிகாவா கருத்துத் தெரிவித்துள்ளார்.

சமாதான முயற்சிகளை மீண்டும் ஆரம்பிக்கும் வகையில், தற்போது நிலவும் அரசியல் சர்ச்சைக்கு விரைவில் முடிவு காணப்பட்டாலே, அபிவிருத்திப் பணிகளை துரிதப்படுத்த முடியும் என மேலும் குறிப்பிட்ட அவர், அரசியல் சர்ச்சைக்குக் காலம் தாழ்த்தாது தீர்வொன்றைக் காண்பதன் மூலம் தாம தங்களினால் ஏற்படக்கூடிய நட்டங்களைத் தவிர்க்கமுடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

இச்சர்ச்சைகளுக்குத் தீர்வு காணத் தாமதிப்பதன் மூலம் சர்வதேச சமூகத்துக்கு தவறான சமிக்ஞைகளை இலங்கை காட்டி வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஜப்பானிய பொருளாதார ஒத்துழைப்புக் குழுவொன்றுக்குத் தலைமை தாங்கி கொழும்புக்குச் சென்ற இவர், கொழும்பில் பல்வேறு சந்திப்புக்களை மேற்கொண்டுள்ளதுடன், தன்னுடைய குழுவினருடன் வன்னிக்கு விஜயம் செய்யவுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

மக்கள் பிரச்சினை...

செ.சுதாகரன்

# பரவலாக்கப்படும் நிர்வாக அதிகாரங்கள் சகல பகுதிளுக்கும் விஸ்தாரிக்கப்பட வேண்டும்

நவீன தொழிநுட்பத்தின் வளர்ச்சி காரணமாக இன்று உலகமே ஒரு குடையின் கீழ் ஒரேகுடும்பமாக மாறிவிட்டதாகப் பேசிக் கொள்கின்றனர். உலகின் எந்த மூலையிலுள்ள ஒருவருடனும் நாம் உடனடியாக நொடிப்பொழுதில் தொடர்பினை ஏற்படுத்தி உரையாடமுடிகின்றது. உலகின் மூலை முடுக்கெல்லாம் சென்றுவரமுடிகின்றது. இவை யாவும் இன்றைய நவீனதொழிநுட்ப வளர்ச்சியின் பலாபலன்கள்.

இந்த வகையில் மக்களது தேவைகளைக் கவனித்து, அவர்களை நிர்வகிக்கும அரச நிர்வாக இயந்திரமும் கூடியவரை மக்கள் வாழ்விடங்களுக்கு அண்மித்ததாக நகர்க்தப் படுகின்றன. இதுவரை மாவட்டச செயலகங்களில் குவிக்கப்பட்டிருந்த அதிகாரங்கள், பணிகள யாவும் படிப்படியாகப் பிரதேச செயலகங்களுக்கும், உதவி அரச அதிபர் பணிமனை களுக்கும் பாரப்படுத்தப்பட்டுள்ளன, பாரப் படுத்தப்பட்டும் வருகின்றன. இந்த வகையில் யாழ்.மாவட்டத்தில் 2003 ஆம் ஆண்டு ஆரம்பப் பகுதிவரையில் 3 உதவி அரச அதிபர் பிரிவு களும், 11 பிரதேச செயலகப் பிரிவுகளும் இயங்கிவந்தன. தற்போது ஊர்காவற்துறை உதவி அரசங்க அதிபர் பிரிவு இரண்டாகப் பிரிக்கப்பட்டு, காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவு உதயமாகியுள்ளது. பிரிவுரீதியாகச் சனத்தொகை, பரப்பளவு, கிராம அலுவலர் பிரிவு எண்ணிக்கை போன்ற விபரங்களைக் கீழ்வரும் அட்டவணை விளக்குகின்றது.

யாழ்.மாவட்டத்திலே மொத்தமாக 435 கிராம அலுவலர் பிரிவுகளில் சுமார் 584,692 மக்கள் வாழ்கின்றனர். இக்கணக்கு இன்றைய திகதியில் மேலும் அதிகரித்து இருக்கும். இந்த அட்டவணையிலுள்ள புள்ளிவிபரங்கள் 2003 ஆம் ஆண்டு நவம்பர் மாத முடிவில் எடுக்கப்பட்டவை.

நிர்வாகப் பணிகள் அனைத்தும் எவ்வளவு தூரம் பன்முகப்படுத்தப்பட்டு, பிரதேச செயலகங்களுக்குப் பாரப்படுத்தப்படுகின்றதோ, அந்தளவுக்கு மக்கள் அச்செயலகங்களைச் சென்றடையக்கூடிய வாய்ப்பும் இருக்கவேண்டும். அப்போதுதான் அதன் முழுப்பயனையும் பெறக்கூடியதாக இருக்கும்.

இந்தவகையில்தான் கடந்த வருடம் ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு இரண்டாகப் பிரிக்கப்பட்டது. 56.49 சதுரகிலோ மீற்றர் பரப்பளவுள்ள இவ்வுதவி அரச அதிபர் பிரிவு - 24 கிராம அலுவலர் பிரிவுகளையும் 14695 மக்களையும் கொண்டது. இச்சிறிய பிரிவே மக்களின் போக்குவரத்து வசதிக்காகவும், சில அரசியல் நோக்கங்களுக்காகவும் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. இந்து கலாசார அலுவல்கள் அமைச்சரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான தி.மகேஸ்வரனின் முயற்சியினால், திடீரென காரைநகர் உதவி அரச அதிபர் பணிமனை- 9 கிராம அலுவலர் பிரிவுகளை ஊர்காவற்துறை உதவி அரச அதிபர் பிரிவில் இருந்து பிரித்தெடுத்து அமைக்கப்பட்டது. இதனால் இப்பகுதி வாழ்மக்கள் நற்பயனடைந்தனர் என்பதனை மறுக்கமுடியாது.

ஆனால், இதைவிட நான்கு மடங்கு பெரிய நிலப்பரப்பையும் மூன்று மடங்கு கிராம அலுவலர் பிரிவுகளையும் உள்ளடக்கிய தென்மராட்சிப் பிரதேசம் இன்றும் ஒரேபிரிவாகவே இயங்கிவருகிறது. கைதடி, நாவற்குழி பகுதியிலிருந்து எழுதுமட்டுவாழ் வரையான 232.18 சதுரகிலோ மீற்றர் பரப்பளவையும் 60 கிராம அலுவலர் பிரிவுகளையும் உள்ளடக்கிய பிரதேசமாக விளங்குகின்றது. யாழ் மாவட்டத்திலுள்ள ஏனைய பிரிவுகளுடன் ஒப்பிடும்போது இது மிகப்பெரிய பிரதேசமாகும். இடப்பெயர்வு காரணமாக வெளிமாவட்டங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் சென்றவர்களையும் இணைத்துப் பார்த்தால், மக்கள் தொகை மேலும் அதிகமாகும்.

நாளாந்தம் பல்வேறு தேவைகளுக்காகப் பிரதேச செயலகத்துக்கு மக்கள் சென்று வரவேண்டியுள்ளது. பிரதேசசெயலகத்தின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பல குக்கிராமங்கள் உள்ளன. இக்கிராமங்களிலிருந்து பிரதேச செயலகத்திற்கு வரவேண்டிய மக்கள் - தத்தமது சொந்த வாகனத்தையே பயன்படுத்த வேண்டும். பொதுப் போக்குவரத்து வசதிகள் இன்னமும் பல கிராமங்களைச் சென்றடையவில்லை. இதனால், வயது முதிர்ந்தவர்கள் பாடுதான் பெருந்திண்டாட்டம். குறிப்பாக ஓய்வூதியர்கள் தமது தேவைக்காக வாடகைக்கு வண்டியை அமர்த்தியே வந்து செல்லவேண்டியுள்ளது. இதனால், வயது முதிர்ந்தவர்களுக்கு தேவையற்ற பணச்செலவும், நேரச்செலவும், வீண் அலைச்சலும் ஏற்படுகின்றது. அது மட்டுமன்றி, பிரதேச செயலகத்திலும் நெருக்கடியும், ஊழியர்களுக்கு வேலைப்பளுவும் அதிகமாகவுள்ளது. இத்தகையதும், இன்னும் இங்கு குறிப்பிடப்படாத பல்வேறு காரணங்களாலும் - தென்மராட்சிப் பிரதேசெயலகம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு கொடிகாமத்தில் ஓர் உதவி அரச அதிபர் பிரிவு உருவாக்கப்படல் வேண்டும் என்ற கோரிக்கை பல ஆண்டுகளுக்கு முன்பே விடுக்கப்பட்டது. அதற்கான முன் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டதாகவும் அறியமுடிகின்றது. ஆனால் இவற்றை எல்லாம் புறந்தள்ளி, காரைநகரில் ஒரு உதவி அரச அதிபர் பிரிவு உதயமாகி விட்டதுதான் ஆச்சரியமாகவுள்ளது. இங்கு நான் குறிப்பிடுவது காரைநகரில் உதவி அரச அதிபர் பிரிவு உருவானது தவறு என்றல்ல. அதைவிட முக்கியமானதும், அவசியமானதுமான கொடிகாமம் உதவி அரச அதிபர் பிரிவு உருவாக்கப்படாமை பற்றியதே. காரைநகர் பிரிந்ததைப் பற்றி நாம் கவலைப் படவுமில்லை, பொறாமைப்படவுமில்லை. ஆனால், நாம் கேட்பதெல்லாம் - எமது தேவைகளையும், யுத்தத்தால் அழிந்துபோயுள்ள எமது பிரதேச துரித அபிவிருத்தியையும் கருத்திற்கொண்டு, கொடிகாமத்தில் ஒரு பிரதேச செயலகம் அமைக்கப்படவேண்டும் என்பதே யாகும். அதுவும் உதவி அரச அதிபர் பிரிவாக அல்லாது, பிரதேச செயலகமாகவே அமைக்கப் படல்வேண்டும். அப்போதுதான் எமது பிரதேசமும் செழிப்படையும், எம்மக்கள் வாழ்வும் செழிப்படையும். 24 கிராம அலுவலர் பிரிவுகளைக்கொண்ட ஊர்காவற்துறை உதவி அரச அதிபர் பிரிவு இரண்டாகப் பிரிந்து, காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவு உதயமானவேளையில், அதற்குப் பெரிதும் காரணமாக இருந்த அமைச்சர் மகேஸ்வரன் - 2003 ஆம் ஆண்டு முடிவதற்கிடையில் கொடிகாமம் உதவி அரச அதிபர் பிரிவு ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவித்தார். 2003 ஆம் ஆண்டு முடிந்து மாதமும் ஒன்று கடந்தாகிவிட்டது. இது தொடர்பான எந்தவொரு அறிகுறியும் இல்லை. அரசியல்வாதிகளின் வாக்குறுதிகள காற்றோடு காற்றாகப் போவதைப்போலவே, அமைச்சரது உறுதிமொழியும் மறைந்து போயிற்று, தனது சொந்த ஊரினை உயர்த்துவதற்கு முயற்சி எடுத்த அமைச்சர் - ஏனைய பிரிவு மக்களது குறைகளையும் தீர்க்க அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவாரா? பொறுத்திருந்து பார்ப்போம். காலந்தான் பதில் சொல்லும்.

| பிரதேச செயலர்/ உ.அ.அதிபர் பிரிவு | பரப்பளவு (சதுர கிலோ மீற்றர்) | சனத்தொகை | கிராம அலுவலர் பிரிவு எண்ணிக்கை |
|---|---|---|---|
| மருதங்கேணி | 129.96 | 16,363 | 18 |
| சாவகச்சேரி | 232.18 | 67,108 | 60 |
| பருத்தித்துறை | 63.16 | 47,290 | 35 |
| நல்லூர் | 32.81 | 63,026 | 40 |
| கோப்பாய் | 103.90 | 68,769 | 31 |
| உடுவில் | 30.05 | 51,389 | 30 |
| கரவெட்டி | 68.95 | 46,843 | 35 |
| தெல்லிப்பளை | 56.72 | 22,811 | 45 |
| சண்டிலிப்பாய் | 49.18 | 54,345 | 28 |
| நெடுந்தீவு | 47.16 | 5,876 | 06 |
| வேலணை | 93.89 | 16,815 | 30 |
| சங்கானை | 45.63 | 45,915 | 25 |
| ஊர்காவற்துறை | 56.49 | 14,695 | 15 |
| யாழ்ப்பாணம் | 13.14 | 53,064 | 28 |
| காரைநகர் | — | 10,392 | 09 |
| மொத்தம் | | | 435 |

செய்திக் கட்டுரை

இ.கமலதாஸ்

# வீதி விபத்தினால் வரும் விபரீதங்கள்

வீதி விபத்துக்கள் என்பது வேண்டும் என்று செய்யப்படும் செயல்கள் அல்ல. அந்த விபத்துக்கள் என்ன நேரம்? எந்த இடத்தில் ஏற்படும் என்று எவராலும் எதிர்வு கூறிவிட முடியாது. ஆனால், இந்த விபத்துக்களில் இருந்து தப்பித்துக்கொள்வதற்கு ஒரேயொரு வழிதான் உள்ளது. அதுதான் "நாங்கள் ஒவ்வொருவரும் விழிப்புடன் செயற்பட வேண்டிய செயலாகும்."

ஏ-9 கண்டி வீதி திறக்கப்பட்டதன் பிற்பாடு, நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பல தரப்பட்ட வாகனங்கள் வடக்கு- கிழக்கை நோக்கி படையெடுத்துக் கொண்டுவருவதனால, விபத்துக்கள் என்ற பெயரில் நாளுக்கு நாள் எமது மக்களின் உயிர்களும், உடமைகளும் நாசமாகிக்கொண்டிருப்பதும், வீதியில் பிரயாணம் செய்பவர் வீடு வந்து சேர்வாரா? என்ற கேள்விகளும் மக்கள் மத்தியில் முணுமுணுக்கத் தொடங்கிவிட்டது மட்டுமல்லாது, இப்படியாக அதிகரித்துவரும் விபத்துக்களால நமது மக்கள் மத்தியில் இருக்கும் ஒற்றுமை உணர்வு தூக்கி எறியப்பட்டு - கருத்து முரண்பாடுகளுக்கும், கைகலப்புக்களுக்கும் வழி சமைத்துச் செல்வது கவலைக்குரிய விடயம் ஆகும்.

இந்த விபத்துக்கள் அதிகளவு ஏற்படுவதற்கு முதன்மைக் காரணம் வீதிகள் சீரின்மையே ஆகும். யுத்தம் என்ற போர்வைக்குள் அடக்கப்பட்ட வடக்கு - கிழக்கு பகுதிகள்- புனரமைப்பு, புதிய நிர்மாணிப்பு போன்ற அனைத்து விடயங்களிலும் புறக்கணிக்கப்பட்டு வருகின்றது என்றால், எவராலும் மறுத்துரைக்கமுடியாது. அந்த வகையில் வடக்கு - கிழக்கிலுள்ள வீதிகளில் பெரும்பாலனவை குன்றும் குழியுமாகவே காட்சிதருகின்றன. சில வீதிகள் இலைமறைகாயாக அரையும்குறையுமாகப் புனரமைக்கப்பட்டு இருக்கின்றது. இன்னும் சில வீதிகள் ஆரம்பிக்கப்பட்டதன் பிற்பாடு மீளத்திருத்தப்பட்ட வரலாறே இல்லாத நிலைகளும் உள்ளன.

இப்படிப்பட்ட வீதிகளில் பயணத்தை செய்யும் வாகனங்களும், வாகனச் சாரதிகளும், பொதுமக்களும் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாவதும், தங்களது உயிர்களுக்கு விலை பேசிக்கொண்டே பயணிக்க வேண்டியநிலைமையும் தலைநிமிர்ந்து நிற்கின்றது.

அடுத்து இந்த விபத்துக்கள் பட்டியல் வளர்ந்து செல்வதற்கு வாகன ஓட்டுநர்கள், நடத்துநர்கள் கவனக்குறைவுகளும், தவறுகளும் பிரதான காரணம் ஆகும். இன்று வாகனம் ஓட்டுவதற்கான அனுமதிப்பத்திரங்களைப் பெறாத பலர், வாகனங்களை செலுத்த முன் வருகின்றபோது, பல விபத்துக்கள் ஏற்படுகின்றது. குறிப்பாக, வாகன அனுமதிப்பத்திரம் பெற்றிராத இந்த வாகன ஓட்டுநர்கள்- வீதிகளில் வாகனங்களைச் செலுத்தும்முறைகள், மற்றும் வீதிச்சட்டங்கள், நடைமுறைகள், குறியீடுகள் பற்றி தெரிந்திருக்காத நிலையிலும் விபத்துக்கள் ஏற்படவாய்ப்புக்கள் அதிகமாக உள்ளது.

மேலும் வாகன ஓட்டுநர் அனுமதிப்பத்திரம பெற்றவர்களோ அல்லது பெறாதவர்களோ வாகனங்களை ஓட்டும்போது, தங்களது சிந்தனைகளையும், புலன்களையும் எங்கேயோ அலைய விட்டுக்கொண்டு தமது கருமத்தில் கண்ணற்றவர்களாக செயற்படுவதாலும் இந்த விபத்துக்கள் ஏற்படுகின்றது.

இன்னும் இந்த வாகன ஓட்டுநர்களும், நடத்துநர்களும், வாகனங்களை செலுத்தும் போது - மதுபோதை, சிகரட் முதலான சாதனங்களை பாவித்துக்கொண்டும் செயற்படுவதன்மூலமும் இந்த விபத்துக்கள் அதிகளவு ஏற்பட்டுள்ளது.

வாகன ஓட்டுநர்கள், நடத்துநர்கள் தவறுகள் செய்கின்றபோதிலும், அவர்களுக்கு இடையூறாகப் பொதுமக்களும் செயற்படுகின்றனர். பாதசாரிகளும், இரட்டை சில்லு வாகனங்களான துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் போன்றவற்றைச் செலுத்தும் இளைஞர்கள், யுவதிகள், சிறுவர்கள் போன்ற வர்க்கத்தினர் குறிப்பிடத்தக்கவர்கள். இந்த வர்க்கத்தினர் வீதிச்சட்டங்களையும், ஒழுங்குகளையும் கருத்தில் கொள்ளாது, வீதிகளில் கூட்டம் கூட்டமாக சவாரி செய்வதால், ஏனைய வீதிப பாவனையாளர்கள் பெரும் சிரமங்களைச் சந்திப்பது மட்டுமல்லாது, உயிர்களும், உடல்களும் விபத்துக்குள்ளாகி கொடூரநிலையில் இருப்பது வேதனைக்குரியவிடயமாகும்.

தங்கள் பொழுதினை இன்பமாக போக்குவதற்கு எத்தனிக்கும் சிறுவர்கள் பலர் - வீதிகளையும் வீதி ஓரங்களையும் விளையாட்டு மைதானமாகப் பாவித்து வருகின்றனர். குறிப்பாக பந்தடித்தல், பட்டம் விடுதல் போன்ற விளையாட்டுக்களை மேற்கொள்ளும் இந்தச் சிறுவர்கள், தங்கள் பந்துகளைத்தேடியோ அல்லது பட்டங்களை தேடியோ வீதிகளை பார்க்காமல் கடக்க எத்தனிக்கும்போது, பல விபத்துக்கள் ஏற்பட்ட வரலாறுகள் உண்டு. இப்படியான செயல்களிலிருந்து அந்த வளரும் பயிர்களை நிறுத்த வேண்டியது பிள்ளையைப் பாதுகாத்து வருபவர் கடமை மட்டும் அல்லாது, கட்டாயமும ஆகும்.

இன்னும் விபத்துக்கள் தோற்றம் பெறுவதற்கு வீதியோரங்களிலும், வீதிகளிலும் கவனிப்பாரற்றநிலையிலும், கவனிக்கும் நிலையிலும், ஆடு, மாடு, நாய் போன்ற விலங்குக்ளைக் கட்டாக்காலிகளாகக் திரிய விடுவதனாலும் விபத்துக்கள் நீள்கின்றன.

இந்த விலங்குகள் வீதிகளில் தமது வயிற்றுப்பசிக்கு இரைதேடியும், உல்லாச உறக்கம் செய்தல்,போன்றவற்றை எதிர்பாராமல் செய்வதன் மூலம், வாகன ஓட்டுநர்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகி விபத்து என்ற பட்டியலுக்குள் தங்களையும், தங்களது வாகனங்களையும் செலுத்தவேண்டிய நிலைக்கு நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்.

இவ்வாறு பல சந்தர்ப்பங்களில் விபத்துக்களைச் சந்திக்கும் நமது சமூகத்துக்குச் சில வர்க்கத்தினர் - நிர்ப்பந்திக்கப்படவேண்டிய சேவைகளை செய்யவேண்டியது கட்டாயம் ஆகும். அதில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் பிரதான இடத்தைப் பெறுகின்றார்கள். வீதி அபிவிருத்தி சபையினர் நமது வீதிகளை புனரமைப்பு செய்து, எங்கள் உயிர்களை வாழவிடுவார்களா...? இல்லை வதைத்து விடுவார்களோ? தெரியவில்லை.

அடுத்து வீதி விபத்துக்களை தடுப்பதற்கு சம்மந்தப்பட்டவாகள், தங்கள் சேவைகளை நேர்மையுடனும், கண்ணியமாகவும் மேற்கொள்ளவேண்டும். வாகனவேகம், சாரதி அனுமதிப்பத்திரம் போன்றவற்றில் மிக உன்னிப்பாகச் செயற்படுவது மட்டுமல்லாமல், மாணவர்கள், வளர்ந்தோர் மத்தியில் போக்குவரதது வீதிஒழுங்கு தொடர்பான கல்விகளைப் போதிக்கவேண்டியதும் அவர்கள் பொறுப்பு.


இந்த உயரியமட்டங்கள் மட்டுமல்லாது, மக்களும் விழிப்போடு செயற்பட்டு, வீதிப் பாவனையாளர்களுக்கு எந்த வகையிலும் இடையூறு செய்யாமல் செயற்பட்டால், நாங்கள் விபத்துக்களில் இருந்தும் தப்பித்துக் கொள்ளலாம்.

"விழிப்புடன் உள்ள ஒரு சமூகம்
வீழ்ந்த வரலாறுகள் இல்லை"

# சன நெரிசலில் சிக்குண்டு 'ஹஜ்' யாத்திரிகர்கள்

# இருநூற்று இருபத்து நான்கு பேர் மரணம்!

## ஜமரா பாலத்தில் சம்பவம்



ஹஜ் யாத்திரைக்குச் சென்றிருந்த யாத்திரிகர்களில் சனநெரிசலில் சிக்கி 224 பேர் மரணமடைந்ததாகவும், அதேயளவு எண்ணிக்கையானோர் காயமடைந்ததாகவும் ஹஜ் நிகழ்ச்சிக்குப் பொறுப்பான அமைச்சர் இயாட் மதனி தெரிவித்தார்.

நான்கு மணித்தியாலங்கள் நடைபெற்ற சமய நிகழ்ச்சியின்போது இந்த அனர்த்தம் நிகழ்ந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மெக்காவிற்கு அருகே அமைந்துள்ள மினா என்ற இடத்திலுள்ள யமரா பாலத்தருகிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இந்தப் பாலத்தில் காணப்படும் தூண், பாவத்தின் சின்னம் எனக் கருதப்படுகிறது. அதன் மீது கல்லையெறிந்து பாவத்தைப் போக்குவது யாத்திரிகர்களின் வழமையான ஒரு செயற்பாடாகும். இவ்வாறான நிகழ்வொன்றின்போது ஏற்பட்ட நெரிசலில் சிக்குண்டவர்களே உயிரிழந்தனர்.

இந்த ஆண்டு சுமார் 2 மில்லியன் முஸ்லிம்கள் ஹஜ் யாத்திரையில் பங்குபற்றியிருந்தனர்.

கல் எறிதல் அதன்பின்னர் மிருகங்களைப் பலியிடுதல் என்பன ஹஜ் யாத்திரிகர்கள் மேற்கொள்ளும் இரு முக்கிய நிகழ்வுகளாகும். கல்லெறிதல் நிகழ்வு மிகவும் ஆபத்து மிகுந்ததாகும்.

கல் எறியும் நிகழ்வில் கலந்துகொள்வதற்காக 50 அடி நீளமான பாலத்தின் மீதும் அதன் கீழ்ப் பகுதியூடாகவும் பல ஆயிரம் யாத்திரிகர்கள் ஒரேநேரத்தில் செல்ல முற்பட்டதே இந்த சன நெரிசலுக்குக் காரணமென மேலும் தெரிவிக்கப்படுகிறது.

# படகு தீப்பற்றிக் கொண்டதில் 200 பேரைக் காணவில்லை!

## கொங்கோ நாட்டில் பயங்கரம்



கொங்கோவின் தென்மேற்குப் பகுதி நகரான லுகொலெராவில் ஆற்றில் பயணித்துக் கொண்டிருந்த படகொன்று தீப்பற்றிக் கொண்டதில் 200 இற்கும் மேற்பட்ட பயணிகள் காணாமற்போயுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் படகில் 500 பேர்வரை பயணித்ததாகவும், அவர்களில் 301 பேர் காப்பாற்றப்பட்டுள்ளதாகவும் கொங்கோவிலுள்ள ஐக்கிய நாடுகள் சபை பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அனுமதிக்கப்பட்ட பயணிகளின் எண்ணிக்கையிலும் பார்க்க கூடுதலானோரை ஏற்றிச்சென்றவேளையிலேயே படகு தீப்பற்றிக் கொண்டதாகவும் பலர் தமது உயிரைக் காப்பாற்றிக்கொள்வதற்காக ஆற்றில் குதித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

குதித்தவர்களில் நீச்சல் தெரிந்தவர்கள் கரையை அடைந்ததாகவும் ஏனையோருக்கு என்ன நடந்தது எனத் தெரியவில்லை எனவும் ஐக்கிய நாடுகள் சபை பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

கொங்கோவில் ஆறுகளும் ஏரிகளும் அதிகளவில் காணப்படுவதால், கூடுதலான மக்கள் படகுகள் மூலமே தமது பயணங்களை மேற்கொள்கின்றனர்.

கடந்த நவம்பர் மாதம் இதேபோன்று அதிக பயணிகளை ஏற்றிச்சென்ற படகொன்று மெயின் டொம்பி என்ற ஆற்றில் மூழ்கியதில் 130 பேர்வரை உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

உலக நோக்கு

### ஈராக்கில் - குர்திஷ் கட்சிகளின் அலுவலகங்கள் மீது

# பாரிய தற்கொலைத் தாக்குதல்கள்; 140 இற்கு மேற்பட்டோர் பலியாகினர்!

ஈராக்கின் வடபகுதி நகரான இர்பில் பகுதியில் குர்திஷ் கட்சிகளின் இரண்டு காரியாலயங்களில் நேற்று கூட்டங்கள் நடைபெற்றுகொண்டிருந்தபோது நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுதாரிகளின் தாக்குதல்களில் 140 இற்கும் மேற்பட்டோர் பலியாகியிருக்கலாமென அஞ்சப்படுகிறது.

இரு கட்சிகளினதும் உயர்மட்ட அதிகாரிகள் கொல்லப்பட்டுள்ளதாகவும், இதுவரை 67 பேர் உயிரிழந்தமை ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதாகவும், காயமடைந்தவர்கள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

முஸ்லிம்களின் விடுமுறை தினமான ஈபிட் - அல் - அதாவை கொண்டாடும்முகமாக பாதுகாப்பு நடவடிக்கைகள் தளர்த்தப்பட்டுள்ள வேளையிலேயே இந்த இரண்டு தாக்குதல்களும் நடத்தப்பட்டன.


குர்திஷ் நாடாளுமன்றத்தின் இரு கட்சிகளான குர்திஷ் ஜனநாயகக்கட்சி மற்றும் குர்திஷ் தேசப்பற்றாளர் அமைப்பு ஆகியவை ஒழுங்கு செய்திருந்த கூட்டங்களிலேயே இந்தத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக குர்திஷ் நாடாளுமன்றத்தின் மனிதஉரிமைக்குப் பொறுப்பான அமைச்சர் மொஹமட் இசான் கருத்துத் தெரிவிக்கையில், குர்திஷ் தேசப்பற்றாளர் அமைப்பினால் ஒழுங்குசெய்யப்பட்ட கூட்டத்தில் 60 பேரும், குர்திஷ் ஜனநாயகக் கட்சியினால் ஒழுங்குசெய்யப்பட்ட கூட்டத்தில் 80 பேரும் கொல்லப்பட்டிருக்கலாம் என தான் நம்பிக்கை கொண்டுள்ளதாகத் தெரிவித்தார்.



### அணுசக்தி தொழில் நுட்பத்தை விற்பனை செய்த

# பாகிஸ்தான் அணுகுண்டின் தந்தையான 'கான்' விஞ்ஞான ஆலோசகர் பதவியிலிருந்து நீக்கம்!



(இஸ்லாமாபாத்)

அணுகுண்டின் தந்தை என வர்ணிக்கப்பட்டுவரும் பாகிஸ்தானின் அணு ஆயுதங்கள் தொடர்பான திட்டத்தின் ஸ்தாபகரான அப்துல் ஆடீர் கான் விஞ்ஞான ஆலோசகர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

அணுசக்தி தொடர்பான தொழிலநுட்பத்தை ஈரான், லிபியா ஆகிய நாடுகளுக்கு விற்றார் எனக் குற்றம் சுமத்தப்பட்டு, பாகிஸ்தானின் அணுசக்தி கட்டளைச் சபையினால் இவர் வெளியேற்றப்பட்டார்.


சந்தேகத்தின்பேரில் கான் மீதான விசாரணைகள் மேற்கொண்ட பின்னர் குற்றம் உறுதி செய்யப்பட்டதாக பி.பி.சி. செய்தியாளர் ஒருவர் தெரிவித்தார்.

பாகிஸ்தானின் அணுசக்தி திட்டத்தின் தலைவராக 2001 ஆம் ஆண்டு முதல் தனது பணியை ஆரம்பித்திருந்த கான், தனது பதவிக்கால ஓய்விற்குப்பின் விஞ்ஞான ஆலோசகராகப் பணிபுரிந்து வந்தார்.

ஐக்கிய நாடுகளின் சர்வதேச அணுசக்தி அமைப்பு ஈரான், லிபியா ஆகிய நாடுகளின் அணு ஆயுதங்கள் தொடர்பான விசாரணைகளில் ஈடுபட்டிருந்தவேளை, அணுசக்தி தொடர்பான தொழில்நுட்பத்தை அந்த நாடுகள் பாகிஸ்தானிடமிருந்தே பெற்றுக்கொண்டுள்ளன என்ற உண்மையைத் தெரிந்துகொண்டனர்.

இந்தத் தகவலை ஐக்கிய நாடுகள் சபை பாகிஸ்தானிடம் தெரிவித்திருந்தது.

'கான் ஆய்வு மையம்' என்று அழைக்கப்படும் அணுசக்தி தொடர்பாகச் செயற்பட்டு வரும் ஆய்வு கூடத்தைச் சேர்ந்த 15 பணியாளர்கள் இதுவரை விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். 5 விஞ்ஞானிகளும், அதிகாரிகள் சிலரும் தற்போதும் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.




அணுசக்தித் தொழில்நுட்பத்தை பாகிஸ்தான் சட்டவிரோதமாக அயல் நாடுகளுக்கு விற்பனை செய்த தகவல்களை பாகிஸ்தானியப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டதன் மூலம் அணு ஆயுதங்கள் தொடர்பான மதிப்பை பாகிஸ்தான் இழந்துள்ளதாக இஸ்லாமாபாத் பத்திரிகையாளர் ஒருவர் தெரிவித்தார்.

பாகிஸ்தான் இராணுவத்தினிடையே கான் மிகுந்த செல்வாக்குள்ள மனிதராகத் திகழ்ந்தார்.

மேலும் - அணுசக்தி, கனரக ஆயுதங்கள் தொடர்பான தொழில்நுட்பங்களை விற்றமைக்காக கானின் கீழ் கடமையாற்றிய விஞ்ஞானிகளும், அதிகாரிகளும் பல மில்லியன் டொலர்களைப் பெற்றுள்ளதாக விசாரணையின்போது தெரியவந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ஆயுதக் கிடங்கு வெடிவிபத்து; 20 ஈராக்கியர்கள் உயிரிழப்பு!

ஈராக்கில் ஆயுதக்கிடங்கு ஒன்று வெடித்துச் சிதறிய சம்பவத்தில் 20 ஈராக்கியர்கள் கொல்லப்பட்டதாக கூட்டுப் படைகளின் பேச்சாளர் ஒருவர் நேற்றிரவு தகவல் வெளியிட்டார்.

மத்திய ஈராக்கில் நேற்று நள்ளிரவுக்குப் பின்னர் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்ட ஈராக்கியர்கள் கொள்ளைக் கும்பலைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகிறது.

கர்பாலா நகருக்கு 180 கிலோமீற்றர் மேற்கே இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து லெப்.கேணல் றொபேட் ஸ்றெஸ்லேங்கி தெரிவிக்கையில்,

கொள்ளையர்கள் பதுங்குகுழிகளுக்கூடாக இராணுவ ஆயுதக்கிடங்கிற்குள் பிரவேசித்தபோது இந்த வெடிவிபத்து ஏற்பட்டதாகவும், இதில் ஆகக் குறைந்தது 20 ஈராக்கிய கொள்ளையர்கள் உயிரிழந்திருக்கலாம் என மதிப்பிட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

ஈராக்கின் மத்திய பகுதியில் சுமார் 9500 சர்வதேச படையினர், போலந்து நாட்டின் தலை மையில் பணியாற்றுகின்றனர்.

போலந்து துருப்புக்களின் பாதுகாப்பில் இருந்த வெடிபொருள் களஞ்சியமே வெடித்துச் சிதறியது. இதில் கனரக ஆயுத வெடிபொருட்கள், ஆட்லறி ஷெல்கள், ரொக்கட்டுக்கள் என்பன சதாமின் படைகளால் சேமித்து வைக்கப்பட்டிருந்தன.

கொள்ளையர்கள் இந்தக் களஞ்சியத்திலிருந்து ஆயுதங்களைத் திருடி தீவிரவாதக் குழுக்களுக்கு விற்கவோ அல்லது உலோகத் தேவைகளுக்குப் பயன்படுத்தவோ முற்பட்டிருக்கலாம் என லெப்.கேணல் றொபேட் ஸ்றெஸ்லேங்கி தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# முஸ்லிம் காங்கிரஸ் தனியாகவே அடுத்த தேர்தலில் போட்டியிடும்!

## செயலாளர் ஹசன் அலி தெரிவிப்பு

கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் பட்டியலில் போட்டியிட்ட சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் இனிவரும் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் கீழேயே போட்டியிடவுள்ளதாக, அந்தக் கட்சியின் செயலாளர் எம்.ரி.ஹசன் அலி தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் மீது தமக்கு இருந்த நம்பிக்கை இழக்கப்பட்டு விட்டதாலேயே தாம் இத்தகையதொரு முடிவுக்கு வந்துள்ளதாகவும், ஐக்கிய தேசிய முன்னணியுடன் செய்த புரிந்துணர்வு உடன்படிக்கையைச் செய்து கொண்டபோதும், தமது சமூகம் கைவிடப்பட்டுவிட்டதாக உணர்வதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன், மாகாண சபைத் தேர்தலிலும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்தே போட்டியிடப் போவதாக அவர் குறிப்பிட்டார்.



நாற்சந்தி

கொழும்பிலை புதிய கூட்டணியினர்... அதுதான் சிறிலங்கா சுதந்திரக் கட்சி- ஜே.வி.பி கூட்டணியினர் நடத்திய கூட்டம் மற்றும் பேரணியிலை எதிர்பார்த்த அளவு கூட்டம் சேரேல்லையாம்....!!

'ஓமோம்... அங்கை அம்மணியின்ரை கட்சியின்ரை நீலக்கொடிகளைவிட... சிவப்புக் கொடிகளும், சட்டைகளும் தொப்பிகளும்தான் அதிகமாகக் காணப்பட்டதாம்....!'

'அது மட்டுமே... அங்கை அந்த தலைமறைவுத் தலைவரான சோமவன்ஸ தான் பிரதம பேச்சாளராகவும் இருந்தாராம்...'

'இன்னுமொரு விஷயம் தெரியுமே ஈ.பி.டி.பியும் எல்லே இதிலை கலந்து கொண்டிருக்கு...!'

'பொருத்தமான ஆக்கள் தான் கூட்டுச் சேர்ந்திருக்கினம்...'

'ஏனாம் சந்திரிகா அம்மையார் அதில் கலந்து கொள்ளவில்லை...?'

'அவ அண்டைக்கு கூட்டணி உடன்படிக்கை கைச்சாத்தான நிகழ்விலும் கலந்து கொள்ளவில்லைத்தானே....!'

'அதைத்தான் ஏன் என்று கேட்கிறேன்....?'

'இது விளங்கேலையே எல்லாம் ஒரு பாதுகாப்பு நடவடிக்கைதான்...'

'என்ன மணியம் குழப்புறாய் தோழமைக்கட்சியோடை கூட்டணி அமைக்கிற முக்கியநாளிலை... பொதுக்கூட்டம் நடத்துற முக்கிய வேளையிலை என்ன பாதுகாப்பு பிரச்சினை ஏற்படப்போகுது...'

'என்ன கனகு இன்னும் விளங்காமைக் கதைக்கிறாய் ஜே.வி.பி, தோழமைக் கட்சிதான்.... என்றாலும் அம்மையாரின்ர துணைவரைத் துடிக்கத் துடிக்கக் கொன்ற கட்சியெல்லே... எப்படி அவையளை அவரால் முழுமையாக நம்பமுடியும்?'

அதுவும் சரிதான்... உன்ரை தர்க்கமே தனிப்பாணிதான்.... போட்டு வா.... கோப்புறேசன் மூடப்போறாங்கள்....

தெருவாசி

### தமிழீழ தேசிய...

ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்துக்கான வலைப்பந்தாட்டப் போட்டி, லெப்.கேணல் புலேந்திரன் ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்துக்கான ஆண்களுக்கான கிளித்தட்டு, கப்டன் அன்பரசி ஞாபகார்த்த வெற்றிக் கேடயங்களுக்கான பெண்களுக்கான கிளித்தட்டுப் போட்டி என்பவற்றுடன்,

லெப்.கேணல் சந்திரன் ஞாபகார்த்த வெற்றிக்கேடய ஆண்களுக்கான கபடிப்போட்டி, மேஜர் திலகன் ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்துக்கான பெண்களுக்கான கபடிப் போட்டி, போன்ற ஒன்பது வெற்றிக் கேடயத்துக்கான ஒன்பது போட்டிகள் நடைபெறவிருப்பதாக தமிழீழ விளையாட்டுத்துறையினர் தெரிவித்தனர்.

# கிறிஸ்தவ ஆலயங்கள் மீது திட்டமிட்டே தாக்குதல்களாம்!

கடந்த காலங்களில் கிறிஸ்தவ ஆலயங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்கள் அனைத்தும் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டதாக அரசாங்க ஊடகப் பேச்சாளர் அலுவலகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டில் மதப் பிரச்சினையை ஏற்படுத்தி - அதனால் ஏற்படும் குழப்பமான சூழ்நிலையைப் பயன்படுத்தி தங்களது அரசியல் நோக்கங்களை அடையும் வகையிலேயே பிறிதொரு குழுவினரால் இந்தத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாறான சம்பவங்களை தடுத்து நிறுத்தவும், குற்றவாளிகளை அடையாளம் காண்பதற்கும் பொதுமக்கள் பொலிஸாருக்கு வேண்டிய உதவிகளை வழங்கவேண்டும் எனவும், அரசாங்கத்தின் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

### ஜனாதிபதி...

தற்போதைய அரசியல் யாப்பு நெருக்கடிக்கு தீர்வுகாண்பதற்கு சாதகமான ஒரு நிலை தற்போது முன்நகர்த்தப்படுகிறது எனவும் அவர் தெரிவித்தார்.

### படையினரை...

உள்ள படையினரை வெளியேறக் கோரி மறியற்போராட்டம் நடத்தவுள்ளனர். இதற்கான ஏற்பாடுகளை அப்பகுதி பொது அமைப்புக்கள் மேற்கொண்டு வருகின்றன. (111)

# புலிகளுக்கு ஹெலி வசதிகளை...

விடுதலைப் புலிகள் முஸ்லிம் மக்களுக்கு தொந்தரவு கொடுத்து வந்ததுடன் - முஸ்லிம் கிராமங்களை ஆக்கிரமித்து படை முகாம்களை அமைத்து வந்தனர்.

அத்துடன் தமிழ், சிங்கள மக்களுக்கு மரண அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டதுடன், நாட்டின் முக்கிய கேந்திர நிலையங்களை குறிவைத்து தாக்குதல் நடத்துவதற்கும் திட்டமிட்டு வந்தனர்.

இவற்றை எல்லாம் தடுத்து நிறுத்துவதற்காகவே ஜனாதிபதி தன்னுடைய அதிகாரங்களை பயன்படுத்தி பாதுகாப்பு அமைச்சினை பொறுப்பேற்றார்.

ஆனால், இன்று புலிகள் வெளிநாட்டிற்கு சென்றுவருவதற்கு தான் பொறுப்பேற்ற அமைச்சின் மூலமே உதவிவருகின்றார்.

இந்நிலையில் பாதுகாப்பு அமைச்சினை ஜனாதிபதி ஏன்? பொறுப்பேற்றார் என்ற கேள்வி எழும்புகின்றது.

கட்டுநாயக்க விமான நிலையத்தை தாக்கிய புலிகளுக்கு அவ்வழியூடாக பயணம் செய்வதற்கு உதவி செய்த ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் விட்ட அதே பிழையினை ஜனாதிபதியும் விட்டுவிட்டார் எனவும் சிகல உறுமய குற்றஞ்சாட்டியுள்ளது.

### பாதுகாப்பு அமைச்சின்...

படிக்கையின் நடைமுறை குறித்து விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தின் செயலர் புலித்தேவனுக்கு கடிதமொன்று அனுப்பிவைக்கப்பட்டது.

இது பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்குரிய கடமையாகும். இதில் ஜனாதிபதியின் தலையீடு எதுவும் இல்லை. ஜனாதிபதிக்கும் இந்தக் கடிதத்துக்கும் எந்தவித தொடர்பும் இல்லை. சமாதான முயற்சிகளைப் பொறுப்பெடுத்து நடத்தும் எண்ணம் ஜனாதிபதிக்கு கிடையாது. இந்த நிலையில் பிரதமர் சமாதான முயற்சியை முன்னெடுத்துச் செல்வதையே அவர் விரும்புகிறார் எனவும் மேலும் தெரிவித்தார்.

# நேற்று அமைதியாக நடைபெற்ற...

அவசரமாக முடிவெடுக்க வேண்டிய இரு விடயங்கள் குறித்தே விவாதிப்பது என்றே முடிவு செய்யப்பட்டது.

விரைவில் தேர்தல் நடைபெறக் கூடிய சூழல் இருப்பதால் தேர்தல் நியமனக் குழுவொன்றை தெரிவு செய்வது தொடர்பாகவும் கட்சியின் பொதுச் சபையைக் கூட்டுவதற்கான ஏற்பாடுகள் தொடர்பாகவுமே நேற்றைய கூட்டத்தில் ஆராயப்பட்டது.

தேர்தல் நியமனக் குழுவிற்கு கட்சித் தலைவர் ஆனந்தசங்கரி, இரா. சம்பந்தன், மாவை. சேனாதிராசா, ஜோசப் பரராஜசிங்கம், ஏகாம்பரம், டேவிட் நாதன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

இதேவேளை, கட்சியின் பொதுச் சபையைக் கூட்டி புதிய நிர்வாகக் குழுவை தெரிவுசெய்வது தொடர்பான விவகாரம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, அந்த யோசனைக்கு ஆனந்தசங்கரியின் ஆதரவாளர்கள் தரப்பில் இருந்து எதிர்ப்புக் கிளம்பியது.

எனினும், எதிர்வரும் 22 ஆம் திகதி செயற்குழு கூடி பொதுச் சபைக் கூட்டத்திற்கான ஏற்பாடுகளைச் செய்வதென இறுதி இணக்கம் எட்டப்பட்டது.

காலை 10 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 1.30 மணிவரை இடம்பெற்ற இந்தச் செயற்குழுக் கூட்டத்தில் 27 செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கை இனப்பிரச்சினை தீர்வு...

போது நின்றுபோயுள்ள சமாதான முயற்சிகள் இயங்கமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. இந்தநிலையில், இந்தியா இந்தப் பிரச்சினைக்கு ஆழமான அக்கறை செலுத்துகின்றது. ஜனாதிபதி சந்திரிகாவும், பிரதமர் ரணிலும் இணைந்து தற்போதைய அரசியல் நெருக்கடியைத் தீர்க்க வேண்டுமென வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்னாண்டோ கூறியதையும் கதிர்காமர் நிராகரித்தார்.

இவ்வாறான முட்டாள்தனமான பேச்சுக்கள் தற்போது பேசப்பட்டு வருகின்றது. இது முற்றிலும் உண்மைக்குப் புறம்பான பேச்சுக்களாகும்.

தற்போதைய அரசியல் நெருக்கடியைத் தீர்ப்பதற்கு ஜனாதிபதி நான்கு திட்டங்களை முன் வைத்தார். அதில், ஒன்று சமாதான செயலணிக்குழுவொன்றை அமைத்து ஜனாதிபதியும், பிரதமரும் இணைந்து செயற்படுவதாகும். ஆனால், இவற்றையெல்லாம் பிரதமர் நிராகரித்துவிட்டார்.

இவ்வாறு இந்தத் திட்ட வரைபுகளை பிரதமர் நிராகரித்தது ஏற்கமுடியாததாகும். இதன்மூலம், சமாதான முயற்சிகள் இறுதிநிலைக்கு வந்தன.

1987 - 1990 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் இந்தியா தனது அமைதிப் படையை இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதிகளுக்கு அனுப்பி வைத்தது. ஆனால், பிற்பட்ட காலத்தில் அந்த அமைதிப்படை விடுதலைப் புலிகளின் தாக்குதலில் பேரழிவைச் சந்தித்தது. இந்த அனுபவ ரீதியான பேரழிவினை இந்தியா கண்டிப்பாக மறக்க வேண்டும்.

இந்தக் காலப்பகுதியில், இந்திய அமைதிப்படை வடக்கு-கிழக்கில் இருந்தபோது அது ஆக்கிரமிப்புப்படை எனவும், உடனே வெளியேறவேண்டுமெனவும் பெரும்பான்மையான சிங்களவர்கள் தெரிவித்தனர். அமைதிப்படையினர் 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையைவிட்டு வெளியேறியபோது 1200 படையினரை இழந்திருந்தது.

அதன்பின் - இன்றுவரை இந்தியா - இலங்கைப் பிரச்சினையில் தள்ளிநிற்கும் கொள்கையைக் கடைப்பிடித்து வருவதுடன், இலங்கை அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைக்கும் தனது ஆதரவை வழங்கி வருகின்றது.

இந்தச் சம்பவங்கள் நடந்து கடந்த பத்து, பதினைந்து வருடங்களாகிவிட்டன. எனவே, தற்போது இந்தியா கண்டிப்பாக இலங்கையில் நடக்கும் பிரச்சினையை புதிய ரீதியில் அணுகவேண்டும்.

எமது பிரச்சினையில் இந்தியா நேரடியாகத் தலையிடவேண்டுமென்று நான் கூறவில்லை. ஆனால், இலங்கையிலுள்ள எந்த இடங்களில் இந்தியா ஆர்வமாக உள்ளதோ அதன் மூலமாக வரச்சொல்லியே நான் கேட்கின்றேன்.

இந்தப் பிராந்தியத்தில் புவிசார் அரசியல் செயற்பாடுகளில் இந்தியா ஆதிக்கம் செலுத்தி வருகின்றது. எனவே, நாம் அனைவரும் இந்தியாவின் பாதுகாப்பிற்கு மதிப்பளிக்க வேண்டும். அத்துடன், விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த திட்டவரைபை பார்க்கும் இந்தியா, அந்தத் திட்ட வரைபு சமஷ்டி முறைக்கு அப்பாற் செல்வதனால் ஏற்படும் விளைவுகளையும் அவதானிக்கின்றது.

விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்துக்குமான பிரச்சினையை இந்தியாவால் மட்டுமே தீர்த்து வைக்க முடியும். ஆனால், இந்த விடயத்தில் இந்தியா மௌனமாக இருந்தபடியால், அனுசரணையாளராக நோர்வேயும், சமாதானப் பங்காளராக ஜப்பானும் இலங்கையில் தலையிட்டன.

இந்திய - இலங்கை பாதுகாப்பு உடன்படிக்கையையிட்டு விடுதலைப் புலிகள் மிகுந்த கவலையடைந்துள்ளார்கள். ஏனெனில், அவர்களது கொழும்புடனான இராணுவ சமநிலை இழக்கப்பட்டுவிடும் என்பதனாலாகும்.

இதனைவிட என்னிடம் சொல்வதற்கு ஒன்றுமில்லை. ஆனால், இலங்கைப் பிரச்சினையில் இந்தியா தலையிட வேண்டுமென்பதே எனது நிலைப்பாடாகும்.

இந்தப் பாதுகாப்பு மாநாட்டுக்குச் சென்றிருந்தபோது, கதிர்காமர் இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் பிரஜேஷ் மிஷ்ரா, இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் மற்றும் இந்திய அரசின் மூத்த அதிகாரிகளையும் சந்தித்து இரு நாடுகளுக்குமிடையிலான அபிவிருத்தி தொடர்பாகவும் கலந்துரையாடினார்.


# முக்கிய அறிவித்தல்

எமது ஸ்தாபனமாகிய லிங்கம் அழகு சாதன மாளிகை 02.02.2004 இன்றிலிருந்து எமது பழைய இடத்தில் (அம்பிகா மருந்தகம் அருகாமையில்) வியாபார நடவடிக்கைகளை ஆரம்பிக்கின்றது என்பதை நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

கண்டி வீதி (A9),
சாவகச்சேரி.

(சி/2202)

உரிமையாளரும்,
ஊழியர்களும்.



Touch COMPUTER SYSTEM
"The right way to touch IT"

UDUVIL ROAD, MARUTHANARMADAM, JAFFNA.
T.P. :- 0214 - 590222 E - mail :-etouch@wow.lk

மிகவும் குறைந்த கட்டணத்தில் வார, வார இறுதி, மாலைநேர (4.00 p.m to 7.00 p.m) வகுப்புக்கள் ஆரம்பம்.

| COURSE NAME | COURSE FEES | DURATION |
|---|---|---|
| Diploma in pc handling | FREE | 6 weeks |
| Diploma in Microsoft office | 1500/= | 3months |
| Diploma in Information Technology | 1500/= | 3months |
| Diploma in Multimedia | 2000/= | 3months |
| Diploma in Desktop publishing | 2000/= | 3months |
| Diploma in Engineering Drawing | 2000/= | 3months |
| Diploma in Computer programming | 2000/= | 4months |
| Diploma in Computer Hardware | 2500/= | 4months |
| Sri Lanka Computer Driving Licence | 3000/= | 4months |

REGISTRATION FEES 1100/=

- புதிதாக கணனி வாங்கிய ஒவ்வொருவரும் ஒரே மாதத்தில் கணனி பற்றி முழுமையாக அறிந்து கொள்ளும் Diploma inpc Handling (Online Class) பதிவுக் கட்டணம் மட்டுமே அறிவிடப்படும்!!!
- GIT பாடவிதானத்தை உள்ளடக்கி பாடசாலை மாணவர்களுக்கான மாலை நேர (3.30 to 4.30) கற்கைநெறி - Diploma in Information Technology.
- இலங்கை அரசினால் நடத்தப்பெறும் கணனியில் தேசிய பயிற்சி சான்றிதழிற்கான (Sri Lanka Computer Driving Licence - SL CDL) வகுப்புக்கள்.

புதிய பிரிவுகள் ஆரம்பம் 05.02.2004
காலை 10.00 மணி

(617) Director


இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 02.02.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.